


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 20ம் நாள் நிறைமதி (03-06-2023 சனிக்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## திருஞானசம்பந்தர் குருபூசை



விடை நல்லோரை வைகாசித் திங்கள 22ம் நாள் (05-06-2023) வைகாசி மூல நாண் மீனில் திருஞானசம்பந்தர் சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கொண்டாடப்படும்.

# திருமுறைகளின் பெருமையை உலகறியச் செய்த புதிய இந்திய நாடாளுமன்றத் திறப்புவிழா - ஆணை நமதே



வைகாசி14ம்நாள்(28-05-2023) ஞாயிற்றுக்கிழமை, இந்தியாவின் புதிய நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதி, எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் துணை நிற்க, செந்தமிழ் ஆன சொல்மாலை ஒலிக்க, சைவ ஆதீனங்களின் குருவருள் முன்னிற்க, **"அரசாள்வர் ஆணை நமதே"** என்று கர ஒலியுடன், ஏறுடை செங்கோல் நிலைப்படுத்தப்பட்டு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

எல்லாம்வல்ல திருவருள், மண்ணின் பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதை மற்றும் மீட்பதை, யார் யாரைக் கொண்டு செய்யவேண்டுமென்று அழகான ஒரு திட்டத்தினை எப்போதுமே வைத்திருக்கும் ஆற்றல் கொண்டது. இதன்வழியில் தான் அருளார்கள், சித்தர்கள், ஞானிகள், சமயத் தலைவர்கள், மற்றும் மன்னர்கள் காலத்திற்கு காலம் வந்துகொண்டிருப்பார்கள். அந்தவழியில் இருபதாம் நூற்றாண்டில் ஞானியாக ஒரு நரேந்திரன் எனும் சுவாமி விவேகானந்தரும் பின்னர் இருபத்தோராம் நூற்றாண்டில் பிரதமராக இன்னொரு நரேந்திர மோடியும் வந்துள்ளார்களா என எண்ணத் தோன்றுமளவிற்கு திருவருளின் திருவிளையாடல்கள் அமைந்துள்ளன.

ஒரு செயல் ஏன் நடந்தது, அதன் விளைவென்ன, அதன் பெருமைகள் என்ன என்பதைத் தான் நாங்கள் உற்று நோக்கவேண்டும். இந்தியாவிலே இத்தனை மொழிகள் இருந்தும், தமிழ்மொழியின் பெருமை காலத்திற்குக் காலம் வெளிப்பட பல செயல்கள் நடந்து கொண்டே வருகின்றது. 1947ம் ஆண்டு இந்திய சுதந்திரம் பெற்றவேளை, ஆட்சிப் பொறுப்பினை கைமாற்றும் சடங்கில், திருவாவடுதுறை ஆதீனத்தின் முதன்மையும், அங்கிருந்து சென்ற தம்பிரான் சுவாமிகள் மற்றும் தமிழ்வேத ஓதுவா மூர்த்தியின் **"கோளறுப் பதிகமும்"** இன்றும் பல வகையான இன்னல்கள், நோய்கள் மற்றும் பொருளாதார சீரின்மையிலும் இந்தியாவை நிமிர்ந்து நிற்கவைத்துள்ளது என்றால் மிகையாகாது. இதனை திருஞானசம்பந்தர் ஆணையாக சொல்லிவைத்துள்ளார்.

1947ம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனத்தின் திருவதிகை குமாரசாமி தம்பிரான் சுவாமிகளால் கொடுக்கப்பட்ட செங்கோலை மவுன்ட்பேட்டன் பிரபு பண்டித ஜவகர்லால் நேருவிடம் கையளித்து சுதந்திர இந்தியாவை அறிவித்தார். அந்தச் செங்கோல் அருங்காட்சியக்கத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு, திருவாவடுதுறை ஆதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பராமாசாரிய சுவாமிகளால் 2023 வைகாசி 14ம் நாள் (28-05-2023) அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் மீண்டும் **"கோளறுப் பதிகம்"** ஓதி கையளிக்கப்பட்டு புதிய நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்டது. இதில் தமிழ்நாடு சைவ ஆதீனங்கள், ஓதுவா மூர்த்திகள் மற்றும் 8239 திருமுறைகளை 239 நாளில் பாடிய உடுமலை மாணவி உமா நந்தினியும் கலந்துகொண்டார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

## பொன்னம்பலத்தில் இருந்து எடுத்த திருமுறைகளை மின்னம்பலத்தில் பதிவேற்றிய சச்சிதானந்தம் ஐயா



இலங்கையைச் சேர்ந்த மறவன்புலவு சிவ சச்சிதானந்தம் ஐயாவின் சமயப்பணிககள் எண்ணற்றவை. ஆளுமை, அறிவு, ஆற்றல், வேகம், திருவருட் துணை என்று எல்லாம் ஒருங்கே அமைந்த ஐயாவின் சைவம் மற்றும் தமிழ் சார்ந்த செயற்பாடுகள், இலங்கையில் மட்டுமல்ல உலகப் பொதுவெளியில் ஓங்கி ஒலிக்கின்றன. ஐயாவின் மிகநீண்ட சேவையைப் பாராட்டி வைகாசி 14ம் நாள் (28-05-2023) ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் விழாவொன்று நடைபெற்றது.

ஐயாவின் பன்முக சேவைத்தளத்தில், திருமுறைகளுக்கான வரிசையில், தர்மபுரம் ஆதீனம் 26வது குருமகாசன்னிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம், திருமுறைகள் தொகுக்கப்பட்டு, 10 ஆண்டுகள் கடுமையாக உழைத்து, அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட தருமபுர ஆதீன பன்னிரு திருமுறைத் தொகுப்புகள் என்ற 16 தொகுதி புத்தகங்களின் ஆணிவேர் மறுவன்புலவு சிவ சச்சிதானந்தம் ஐயா ஆவார். எப்படி இராச இராச சோழன் திருமுறைகளை மீட்டு அவற்றை நம்பியாண்டார் தொகுத்தாரோ, அவ்வாறு ஐயாவே முன்னின்று, தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இந்த திருமுறைகளை தொகுத்து அச்சேற்றினார். அத்துடன் நின்றுவிடாது அவற்றினை அப்படியே இணையத்திலும் பதிவேற்றம் செய்தார். மேலும் திருமுறைகளை 27 மொழிகளில், மொழிபெயர்த்து அவற்றினையும் இணையத்தில் பதிவேற்றியுள்ளார்.

அத்துடன் இலங்கையில், குறிப்பாக தமிழர் நிலங்களில், மதமாற்றத்தினை தடுத்து நிறுத்த கடுமையாக உழைத்தும் வருகிறார். இவ்வாறான, ஐயாவின் மிகநீண்ட சமயப்பணிகளை பாராட்டி, சிட்னி வாழ் சைவத் தமிழ்த் தலைவர்கள் மற்றும் சிவனடியார்கள் ஒன்றுகூடி பாராட்டு விழாவினை நடாத்தியிருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**



தமிழ்நாடு சைவ ஆதீனங்களுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்

# சீர்காழியில் ஆறுதிருமுருகன் ஐயாவிற்கு “திருப்பணிச் செம்மல்” விருது



எங்கள் திருமுறை ஈன்ற தெய்வ மண்ணாகிய சீர்காழியில், முப்பத்தியிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சீர்காழி அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்நீராட்டுப் பெருவிழா செய்ய வேண்டுமென்ற திருவருளின் வெளிப்பாட்டில், தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், கோயில் சீர்செய்யும் பணியினை ஆரம்பித்தார்கள். அத்துடன் மட்டுமல்லாமல், குருமணிகள் இந்தக் திருக்குட நன்நீராட்டை முன்னிட்டு, திரு ஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த திரு எழுக்கூற்றிருக்கைப் பதிகத்தினை உலகத் தமிழர்கள் அனைவரும் சேர்ந்து ஒருகோடி முறை ஓதவென்றும் என்ற அறிவிப்பினை விடுத்தது மட்டுமல்ல அதனை செயப்படுத்தியும் வந்தார்கள். திருமுறை ஓதியதன் பயனாக சீர்காழியில் சிலைகள், தேவாரச் செப்பேடுகள் வெளிப்பட்டமை அனைவரும் அறிந்த அற்புதமே.

அவ்வாறு பல சிறப்புக்களுடன் அரங்கேறிய, சீர்காழி அருள்மிகு சட்டைநாத சுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்நீராட்டுப் பெருவிழாவானது, கடந்த வைகாசித் திங்கள் 10 நாள் (24-05-2023) இறையருளோடு சிறப்பாக நடந்தேறி இருந்தது. இந்நிகழ்வில் தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் ஆறுதிருமுருகன் ஐயா உட்பட சைவ ஆர்வலர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிரு முருகன் ஐயாவிற்கு “திருப்பணிச் செம்மல்” விருது வழங்கப்பட்டது.

மேலும் “சிவாகம கலாநிதி” - (சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், அச்சுவேலி சிவஸ்ரீ கு.வைத்தீஸ்வர குருக்கள், சிவஸ்ரீ. கு.வெங்கட்ராமன் என்கிற இராமு சிவாசாரியார், கஞ்சனூர் சிவஸ்ரீ நீ.கணேச சிவாசாரியார், நாட்டரசங் கோட்டை சிவஸ்ரீ சுப்பிரமணிய சிவாசாரியார், லண்டன் சிவஸ்ரீ கைலாசம் கணேஷ் குருக்கள்), “திருமுறை கலாநிதி” - (திருக்காளத்தி திரு.ச.முத்துக்குமாரசுவாமி ஓதுவார், ஸ்ரீமத் வாமதேவ சிவாக்கிர சுவாமிகள்), “தருமை ஆதீனப் புலவர்” - (திருவான்மியூர் திரு.கலைச்செல்வன் மதுசூதனன், வாழ்க்கை திரு.செ.தீபன்ராஜ்), “சைவசித்தாந்த கலாநிதி” - (மருத்துவர் திருமதி சுபோதினி சின்னத்தம்பி - சிங்கப்பூர்), “திருமுறைக் காவலர்” - (சிங்கப்பூர் திரு.சிவ.மயூரதன்), “மருத்துவ கலாநிதி” - (மருத்துவர் இரா.முருகேசன் - கொள்ளிடம், மருத்துவர் இரா.வெங்கடேசன் -மணக்குடி), “நாதஸ்வர கலாநிதி” (யாழ்ப்பாணம் திரு ப. குமரன் இடும்பாவனம் திரு.பிரகாஷ் இளையராஜா, சீர்காழி குரு.சரவணக்குமார்), “மேளக்கர்த்தா கலாநிதி” - ஆச்சாள்புரம் திரு. சங்கரன், “பக்தி இசைக்கலாநிதி” - சென்னை திரு. வீரமணி ராஜூ என பல விருதுகள் தருமை ஆதீன 27வது குருமகா சந்நிதானம் அவர்களின் திருக்கரங்களால் வழங்கி வைக்கப்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்களவில் ஈழத்தை சார்ந்தோர்கள் விருதை பெற்றிருந்தமை பெருமைக்குரியதாகும்.

“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”

திருச்சிற்றம்பலம்

# முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த தமிழர்களுக்கு தமிழில் நீத்தார் வழிபாடு



இலங்கையில் இடம்பெற்ற போர் நிலைமைகளால், உயிர் நீத்தவர்களை நினைவுகூறும் வகையில், ஒவ்வொரு வருடமும் ஆங்கில நாட்காட்டிபடி மே 18ம் திகதி நினைவேந்தல் நிகழ்வானது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வை யாழ் பல் கலைக்கழகம் மற்றும் தமிழ் பெரும் அமைப்புகள் இணைந்து முன்னின்று நடாத்தி வருகின்றன. அதனடிப்படையில் இவ்வருடமும் கடந்த மே 18ம் திகதி முள்ளிவாய்க்காலில் பெரும் திரளான மக்கள் கூடி நடாத்தி இருந்தனர்.

இம்முறை உயிர் நீத்தவர்களின் ஆன்ம ஈடேற்றம் கருதி, அகில இலங்கை சைவத்தமிழ் மன்றின் ஒழுங்கமைப்பில் செந்தமிழ் ஆகம அருட்சுனைஞர்கள் கூடி, முள்ளிவாய்கால் பகுதியில் உயிர் நீத்தவர்களின் உறவுகளோடு இணைந்து பெருஞ்சுடர் ஏற்றியும் திடலில் அவர் களுக்கான வணக்கத்தைச் செலுத்தி வழிபட்டதோடு, உயிர் நீத்தவர்களின் ஆன்மா சிவபாதத்தை அடையும் பொருட்டு நீத்தார் வழிபாட்டு சடங்குகளை, இறைமொழியாகிய தெய்வத்தமிழில் நடாத்தி வைத்திருந்தனர். இது ஓர் பெரும் போற்றுதலுக்குரிய செயலாக கருதப் படுகின்றது. இவ்வழிபாட்டில் தென் கயிலை ஆதீன குருமுதல்வர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் மற்றும் சிவகுரு ஆதீன குருமுதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் ஆகிய பெரியோர்களும் கலந்து கொண்டு வழிபாடு ஆற்றியிருந்தனர்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர, சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்.

- சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

# ஒசுத்திரேலியா சிட்னியில் “சுத்த சைவம்” நூல் வெளியீடு



தமிழ்நாடு புனிதர் பேரவை சைவக்கோமான் சிராப்பள்ளி சிவத்திரு. செ. முருகவேள் பெருமான் எழுதிய ”சுத்த சைவம்” நூல் வெளியீட்டு விழாவானது, ஒசுத்திரேலியா சிட்னியில் இடம்பெற்றிருந்தது. இவ்விழாவை சிவத்திரு. தென்னவன் பார்த்திபன் அவர்களுடன் சிட்னி வாழ் சைவத் தமிழர்களும் இணைந்து முன்னெடுத்து நடத்தியிருந்தனர். இந்நூல் வெளியீட்டு விழாவானது கடந்த வைகாசித் திங்கள் 15ம் நாள் (29-05-2023) திங்கள்க்கிழமை, சிட்னியில் இடம்பெற்றிருந்தது.

செந்தமிழ் சிவபூசையுடன் ஆரம்பித்த இவ்விழாவில், பன்னிரு திருமுறைகள் ஓதி வழிபாடுகள் ஆற்றப்பட்டது. முதல் பிரதியை மறுவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவும், அடுத்து பாலம் இலச்சுமணன் அம்மாவும் பெற்றுக் கொண்டனர். நூலில் அறிமுக உரையை சத்தியமூர்த்தி ஐயா, ஐங்கரன் ஐயா ஆகியோர் நிழத்தியிருந்தனர். இவ்விழாவில் அறுபதிற்கும் மேற்பட்ட சிவனடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில், பொன்னம்பலத்தில் இருந்த திருமுறைகளை மின்னம்பலத்திற்கு கொணர்ந்த தற்கால சோழன் மறுவன்புலவு சிவ சச்சிதானந்தம் ஐயா அவர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. குறிப்பாக தர்மபுரம் ஆதீனம் 26வது குருமகாசன்னிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் தொகுக்கப்பட்டு, 10 ஆண்டுகள் கடுமையாக உழைத்து வெளியிடப்பட்ட பன்னிரு திருமுறைத் தொகுப்புகள் என்ற 16 தொகுதி புத்தகங்களின் ஆணிவேர் மறுவன்புலவு சிவ சச்சிதானந்தம் ஐயா என்பதையும், மற்றும் அவரின் மிகநீண்ட சமயப் பணிகளையும் பாராட்டி, சிட்னி வாழ் சைவத் தலைவர்கள், சிவனடியார்கள் ஒன்றுகூடி பாராட்டு விழாவினை நடாத்தியிருந்தனர். இலங்கைத் தீவில் சைவம் காக்க முன்னின்று உழைக்கும் ஐயாவின் சேவையை போற்றுதலுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

”சிவசிவ என்றிட சிவகதி தானே”

திருச்சிற்றம்பலம்




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



## ஆசிரியர்களே வருக!

இது வைகாசித் திங்கள் நம் தவப்பேற்றால் சைவம் தழைக்க வந்துதித்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இறைவனோடு இரண்டறக் கலந்த வைகாசி மூலம் நாண்மீன் குருபூசை வரும் காலம். இன்றைய இளையவர்கள் எல்லாரும் தம் நாயகனாகக் கொண்டாட வேண்டிய ஞானசம்பந்த பிள்ளையின் வரலாற்றை நாம் காலம் தோறும் கற்று வருகின்றோம் ஆயினும், செயற்படுகின்றோமா அவர் வழியில் என்றால் அது கேள்விக்குறியே. இளைய வயதினர் ஒருவர் பதினாறு வயது பருவத்தோடு தம் தோன்றி நோக்கத்தை நிறைவு செய்து இறைவனோடு ஒன்றானவர், அரசையும், ஆட்சி முறையையும் தம் கைக்குள்ளே வைத்திருந்த சமணரை அடியோடு அகற்றி சைவக் கோயில்களையும் நாட்டையும் மீட்டெடுத்த செயல்வீரர். அதனால் தான் சைவம் இன்றளவும் அவரை நாயன்மார்களுள் முதல்வராக வைத்து வழிபடுகின்றது. அவர் காலத்தின் பின்னும் தோன்றிய அடியார்கள் எல்லாம் அவரை வாழ்த்தியும் வணங்கியும் தம் பணி செய்தனர். அவர் சமகாலத்தில் வாழ்ந்த அவரிலும் வயதினால் மூத்த அப்பர் சுவாமிகள் முதலிய அடியவர்களும் தம் தலையில் திருஞானசம்பந்தரது திருவடிகளை சூட்டி மகிழ்ந்தனர். இத்தகு பெருமை பெற்ற திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கையில் இருந்து இன்றைய நம் இளையவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பெரும் செய்தி ஒன்று முத்தாய் உள்ளது.

பதினாறு வயது பருவத்தினளாக பூம்பாவை திருஞானசம்பந்தர் முன் தோன்றி நின்றாள். அழகின் அத்தனை வனப்புகளும் அம்மாதரசியிடம் நிறைந்து வழிகின்றது. அவள் தந்தையாகிய சிவநேசர் ஞானசம்பந்தரை தன் மகளை திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றார். ஆனாலும் ஞானசம்பந்தரோ பூம்பாவையை தன் மகளாக வருவித்து கொண்டார். திலோத்தமை என்கின்ற அழகியை படைத்த நான்முகன் தான் படைத்த பெண்ணின் அழகிலேயே மயங்கி நின்றான் என்று புராணங்கள் சொல்லும். ஆனால் ஞானசம்பந்த பிள்ளையோ தன் வயதின் ஆசைகளை அடக்கி இறைபணியே இனிய பணி என்று வாழ்ந்ததனாலே தான் யாருக்கும் கொடுக்காத உயர் நிலையைக் கொடுத்து பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானும், 'தவமுதல்வர்' சம்பந்தர் என போற்றி பாடினார். ஆசைகளை அடக்கினால் அனுபூதி நிலையை அடையலாம் என்று தன் வாழ்வு மூலம் பாடம் புகட்டிய ஞானசம்பந்த பிள்ளையின் வழியிலேயே எமது இளைஞர்கள் நடக்க முன்வர வேண்டும்.

இலங்கை மண்ணில் யுத்தம் நடைபெற்ற போது, இங்கிருப்பது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என கருதி தமிழ்நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்று மூன்று இளையவர்கள் காணொளி எடுக்கும் மோகத்தால் விபத்தில் சிக்கி இறந்த செய்தி எம் இதயங்களை கனக்க வைக்கின்றது. வாகன ஆசை, வெளிநாட்டு பயண ஆசை, கதாநாயகத்தன ஆசை, தொழில்நுட்ப சாதனங்களின் மீதான ஆசை என்பவற்றால் தினம் தினம் இறந்து போகும் இளைஞர்களை, அவர்கள் குடும்பத்தை, அக்குடும்ப எதிர்காலத்தை நாம் எண்ணிப் பார்க்கும் போது, அவர்கள் மீது கோபப்படுவதா? இரக்கப்படுவதா? எனும் நிலைக்கு தள்ளப்படுகிறோம்.

எம் இளையவர்களை பாதுகாத்தால் தானே என் தலைமுறை இந்த மண்ணில் வாழும். வழிமாறிப்போகும் இளைய சமுதாயத்தை சீரிய பாதையில் செம்மைப்படுத்த எம் முன்னவர்களின் வரலாறுகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பான பணி எமது. திருக்கேதீச்சரத்திற்கும், வெடுக்குநாறி மலைக்கும், குருந்நூர் மலைக்கும் பாதுகாப்பு வேண்டுமெனில் என் தொன்மக்கள் பற்றிய சிந்தனை அடுத்த தலைமுறை மனங்களில் வேரூன்ற வேண்டும். இல்லையேல் நாம் போராடுவதனால் பயன் ஏதும் இல்லை.

வீண் ஆசைகளை தவிர்த்து, விபரீத முடிவுகளிலிருந்து எம்மவர்களை மடைமாற்றி, எம் சமயம், எம் தத்துவம் பற்றிய அறிவினை ஊட்டவும், சிவ வழிபாடு ஈடேற்றத்திற்கு வழி, நம் நாயன்மார்கள் காட்டியதே ஆகச்சிறந்த பாதை என்பதை எடுத்துரைக்கும் பணிகளை பாடசாலைகள்தோறும் முன்னெடுக்க ஆசிரியப் பெருந்தகைகளை தென்னாடு செந்தமிழகம் சிவமடம் சார்பாக அழைத்து நிற்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



## கோன்முறை அரசு செய்க!

'செங்கோல்' என்ற வார்த்தைக்கு அண்மைக்காலமாக பெரும் பரபரப்பு உலவி வருகின்றது. இந்திய பாராளுமன்றத்திற்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து செங்கோல் எடுத்து செல்லப்பட வுள்ளதாக ஊடகங்கள் அனைத்திலும் செய்திகள் நிரம்பி வழிகின்றன. ஈழ ஊடகங்களில் இது தொடர்பான செய்திகளை அதிகம் காண முடியாது இருப்பினும், இச்சம்பவம் தொடர்பில் அறிந்து கொள்ளவேண்டிய கட்டுப்பாடு அனைவருக்கும் உண்டு.

இன்றைய அரசறிவியலானது பல கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கோணங்களின் வரிசையில் அரசுகளை பாகுபடுத்துகிறது. அரசு கொண்டுள்ள தத்துவம், அதன் கோட்பாடு, சிந்தனை, அந்த அரசினுடைய அரசாங்கத்தின் தன்மை என ஏராளமான விடயங்களின் அடிப்படையில் இன்றைய அரசுகள் வகைப்படுத்தப்படுகின்றன. பண்டைய தமிழ்ச் சூழலில் அரசினுடைய வகைப்பாடு பிரதானமாக இரண்டு தலைப்புகளின் கீழே தான் இருந்தது.

01. செங்கோன்மை

02. கொடுங்கோன்மை

செங்கோன்மை என்பது ஓர் அரசின் ஆட்சியில் அறமும், செழிப்பும், நீதியும், தவறாத சட்டமுறையும் நிலவுமாயின் அந்த அரசிற்கு வழங்கப்படும் பெயராகும். அதை அடையாப்படுத்தும் முகமாகவே செங்கோல், அரசின் அடையாளமாக காட்டப்படுகின்றது. செம்மை என்ற தத்துவத்தினைப் எடுத்து இயம்பும் கோல் என்பதே அதனுடைய பொருளாகும். செம்மை பூரணத்தினுடைய குறிப்பீடாக கருதப்படுவதால் தான், சிவபெருமான் என்ற இறை நாமத்தில் வருகின்ற சிவந்தவன் என்ற சொல்லும் பூரணம் குறித்து பொருள்படுகிறது. திருவள்ளுவர் கூட அரசினைப் பிரிக்கின்ற போது, மேற்கூறிய செங்கோன்மை, கொடுங்கோன்மை என்ற இரு பொருள் கோடல்களை வைத்து தான் வகைப்படுத்துகின்றார்.

இந்தச் செங்கோலின் தத்துவத்திற்கு நேர் எதிராக உள்ள கோட்பாடே கொடுங்கோன்மை ஆகும். இதையும் அதே செங்கோல் தான் பிரதிநிதித்துவம் செய்கிறது. கொடுங்கோலுக்கு என்று கோல் இன்மையால் ஒரே கோல், அது நல்வழிப்பட்டதாக இருக்கின்ற போது செங்கோலா வும் தீவழிப்பட்டதாக இருக்கின்றபோது கொடுங்கோல் என்றும் பொருள்படுகின்றது. ஆகவே கோலின் பெயர், அதன் வடிவமைப்பிலும் வரலாற்றிலும் இருப்பதில்லை, அதை ஏந்தும் ஆட்சியாளரின் கரங்களி லேயே இருக்கின்றது என்பது வெளிப்படை.

ஆட்சியாளன் ஆட்சியை அளவிடுவது ஒரு புறமிருக்க, இந்திய பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட செங்கோலின் வரலாற்றை யும் பார்க்க வேண்டியமை எம்கடன். இந்தியா சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில், "வேயுறு தோளிபங்கன்" என்ற தேவார ஒலியோடு இந்தியாவை பறைசாற்றிய தமிழ்கோலாக, செங்கோலானது பாண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடம், திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கி வைக்கப்பட்டது. அந்த செங்கோலானது காணாமல் போயிருந்த நிலையில், அதனை கண்டறிந்து, புதிய நாடளுமன்றம் திறக்கப்பட்ட 28-05-2023 அன்று, அந்த செங்கோலை, பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம், திருவாவடுதுறை ஆதீனத்தின் சந்நிதானம் அவர்களுடன் இணைந்து எம் பழம்பெரும் சைவ ஆதீன முதல்வர்களும் இணைந்து வழங்கி வைத்துள்ளமை எம் தமிழின் பெருமையே!

தமிழ் போற்றும் செங்கோலின் தொன்மைக்காகவும், அதன் தன்மைக்காகவும் நாம் அனைவரும் அதனை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அதேவேளை அது செங்கோலாக உள்ளதா? கொடுங்கோலாக மாறுகின்றதா? என்பதை காலம் தான் முடிவு செய்யும்.

**"மன்னன் கோன்முறை அரசுசெய்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# புங்குடுதீவு அருள்மிகு கண்ணகி அம்மன் திருக்கோயில் கடவுள்மங்கல நன்னீராட்டு ஆனித்திங்கள் 10 நாள் (25 யூன்)





இலங்கையில் ஐந்து கோபுரங்களுடன் 300க்கும் மேற்பட்ட தூண்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள புங்குடுதீவு கிழக்கு கண்ணகி அம்மன் திருக்கோயில் என வழங்கும் அருள்மிகு இராச இராசேசுவரி அம்மன் திருக்கோயில் கடவுள்மங்கல நன்னீராட்டு ஆனித்திங்கள் 10 நாள் (25 யூன் 2023) சிறப்பாக நடைபெறவுள்ளது.

பத்தினித்தெய்வம் கண்ணகி, மதுரையை எரித்தபின் தென்னிந்தியாவில் இருந்து காவல்தெய்வமான பத்திரகாளி அம்பாள் துணையோடு பேழையில் வந்து புங்குடுதீவின் தென்கடலில் கோரியாவடிபகுதியில் கரையொதுங்கியது. கரையோதுங்கிய கடலில் பசுமாடுகள் கடலுக்குள்சென்று சுற்றிவரச் சூழ்ந்து நின்றன. தான் வளர்த்த பட்டி மாடுகளை தேடிச்சென்றவர் தனது பசுக்கள் ஒரு பேழையை சுற்றி நிற்பது கண்டு அதற்குள் பொன்னோ பொருளோ இருக்குமென்றும், தனக்குப் புதையல் கிடைத்ததகாக எண்ணி கடற்கரையோரம் வீட்டுக்கு தலையில் பேழையை சுமந்தபடி தற்போதைய கண்ணகைபுரம் வரை எடுத்து வருகிறார்.

வரும்வழியில் பாரம் வர வர அதிகமாகவே இரண்டு இடங்களில் இறக்கி வைக்கிறார்.



இறக்கிவைத்த இவ்விரு இடங்களிலும் 2 ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளன. மீண்டும் தன்பயணத்தை தொடர்கிறார். 3 வது இடமான தற்போது அமைந்துள்ள இடமான கண்ணகி அம்மன் ஆலயத்தின் தெற்குப்புறம் உள்ள தெப்பக்குளம் அருகே உள்ள பெரிய பூவரசு மரத்தின் அடியில் வைத்து மறுபடி தூக்க முயல்கையில் பேழையை அசைக்கமுடியாது போகவே பேழையைத்திறந்து பார்க்கிறார் அதற்குள் ஒற்றை மார்பகத்தோடு உள்ள கண்ணகி அம்மனும் பத்திரகாளி அம்மன் சிலைகளும் இருக்கக் கண்டு கைகூப்பி வணங்குகிறார்.

பாரம்சுமந்த களைப்பில் அவ்மரத்தடியில் சிறிது ஓய்வுக்காக துண்டைவிரித்து தூங்கிவிடுகிறார். அவரது கனவில் எளுந்தருளி தான் கண்ணகி என்றும் மதுரையில் இருந்து வந்துள்ளேன் எனக்கு இவ்விடத்திலேயே கோவில் எழுப்புவாயாக என்று தெரிவித்துள்ளாள். கற்புக்கரசியான கண்ணகித்தாய் கரைவந்துசேர்ந்த செய்தி புங்குடுதீவெங்கும் காட்டுத்தீபோல் பரவ ஊர்மக்கள் அங்குகூடிடவே அனைத்து மக்களும் கண்ணகிக்கு ஒரு சிறு குடில் அமைத்து வழிபட்டு வரலாயினர்.

ஒருமுறை பூசை நடைபெறும் நாளொன்றில் ஒரு பெண்ணை வசப்படுத்திய கண்ணகி, உருக்கொண்டு கலையாடி இங்கு எனக்கு மக்கள் துயர்துடைக்க பெரிய ஆலயம் எழுப்புங்கள் என்று கூறியதும், ஊர் பெரியவர்களும் கோவில் தலைவரின் பேரனாரும் இணைந்து ஊர்மக்களிடம் கோவிலை பெரிதாக கட்ட வீட்டுக்கு சில பனை மரங்களை தந்துதவுமாறு கேட்கவே அனைவரும் அன்னையின் அருமை பெருமைகளையறியாது சடுதியாகவே மறுதலித்தனர்.

மனசு சஞ்சலத்தோடு வீடுதிரும்பிய ஊர் பெரியவர்கள் அன்று இரவு தூக்கத்தில் இருக்கும்போது பேரிடியுடன் பெருமழை பெய்ய புயலென எழுந்து அன்னை தாண்டவமாட, காலையில் ஒவ்வொரு வீட்டிலும் 3-4 பனைமரங்கள் நிலத்திலும் வீதிகளிலும் வீடுகள் மேலும் சரிந்து கிடந்திட. ஊர்மக்கள் தாமாக எங்கள் வீட்டில் பனைமரம் எடுத்துக்கொள்ளுங்கள் என எல்லோரும் வேண்டுதல் வைக்க மரங்களும் கற்களும் குவிய, பணம்படைத்தோர் பொற்காசுகள் கொடுக்க இந்த ஆலயம் அழகுற கட்டப்பட்டது.

பின்னொரு நாளில் கட்டுத்தேரில் பவனிவந்த அன்னைக்கு சித்திரத்தேர் கட்டியபோது தேர் வெள்ளோட்டம் செய்வதற்கு முதல்நாள் எந்த இடத்தில் பேழையாக வந்தடைந்தாளோ அதே இடத்தில் தேர் வடக்கயிறு வட்டமாக சுற்றியபடி வந்தடைந்தது!

இதுகண்ட ஒருவர் கப்பல் கயிறுபோலும் இதை எடுத்துச்சென்று யாழ்ப்பாணம் கயிற்றுக் கடையில் விற்றால் நல்ல இலாபம் சம்பாதிக்கலாம் என் எண்ணி கையை வைத்து எடுக்க முற்படுகையில் கருநாகம் கடலலைக்குள்



கயிற்றின் வளையத்தினுள் இருந்து சீறியது! அதுகண்டு நிலைகுலைந்த குடியானவன் கண்ணகித்தாயே, உனக்கே கொண்டுவந்து தருகிறேன் என்னை மன்னித்துவிடு என்று கைகூப்பி வணங்கியதும் நாகம்மறைந்தது! அதன்பின் இன்றுவரை அதே வடம்கொண்டுதான் அம்பாளின் தேர் இழுக்கப்படுகிறது. அந்த நாகம் நெடுங்காலமாக தலவிருட்சமான பூவரச மரப் பொந்தில் வாழ்ந்ததாக பலர் கூறினார்கள்.

புங்குடுதீவின் ஆதிகாலத்தில் 12 வட்டார மக்களும் வண்டில் மாடுகட்டி கண்ணகி அம்பாள்மேல் பத்திகொண்டு விரதமிருந்து அம்பாள் ஆலய இரவுபகல் உற்சவங்களில் கலந்துகொண்டு தம்வாழ்வில் கல்வி, செல்வம், வீரம் என அனைத்திலும் மேன்மையடைந்ததாக கண்ணகியின் திருவருளைச் சொல்லிச் சொல்லி மகிழ்வர்.

## புதுமை அன்னை - அருள்மிகு கண்ணகி அம்மனின் புதுமைகள்

1. கடல் நீரில் பேழையில் மிதந்து இடுப்பளவு ஆழத்தில் கரை தட்டுதல்
2. மேய்ச்சல் பசுக்கள் பொழுது பட்டும் பட்டி திரும்பாது கடலில் இறங்கி பேழையை காத்து நின்றமை
3. பேழையை கண்டெடுத்தவர் சுமந்து வருகையில் தனக்கான இடம் வந்தவுடன் பாரம் அதிகரித்து எவராலும் மறுபடியும் அசைக்க முடியாது நிலைத்து நிற்றல்
4. கோயில் அமைக்க பனைகள் கொடுக்க



மனம் ஒப்பாத மக்கள்

5. விடிகாலையில் கோயிலுக்குத் தேவையான பனைகள் புயல் அடித்து வேரோடு சாய்ந்து விழுந்து கிடத்தல்.
6. கோயில் அழகுற அமைக்க கண்ணகி திருவுளம் கொள்ளல்
7. தேர் கட்டிய பின் தேருக்கான பிரமாண்டமான வடம் கடலில் கரை ஒதுங்கல்
8. வடத்தை கண்டெடுத்தவர் விற்க முயல கருநாகம் வடத்தை நெருங்க விடாது தடுத்தல்
9. பிரமாண்டமான வடத்தை தன் தேருக்காக எடுத்துக் கொள்ளல்
10. வாந்திபேதி நோய் கிராமத்தில் பரவ ஊர் வீதிகள் தோறும் நடுச்சாமத்தில் நடமாடி வேப்பிலைகளை தெருக்களில் தூவி நோயை விரட்டியமை
11. கோயில் அயல் அட்டைகளில் உள்ள நெருங்கிய பத்தர்களின் குடிசைகள் வீடுகளுக்கு இரவு நேரங்களில் உலாத்துதல்
12. போர்ச் சூழல் காரணமாக கோயில் நகைகள் மண்ணில் புதைத்துவைத்தபின் புதைத்தவர் யுத்தம் காரணமாக கொல்லப்பட, பரந்த கிராமத்தில் நகைகள் புதைக்கப்பட்ட இடம் தெரியாது இருந்தபோது பெண்ணில் உருவேறி நகைகளை மீட்டு எடுத்தல்.

புதுமை அன்னை கண்ணகியின் அற்புதங்கள் இன்றும் அன்னையை நம்பினோர்க்கு கிடைத்த வண்ணம் உள்ளன.

தொகுப்பு
சிவத்திரு.வ.கங்காளன்

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**ஆணவம் அனாதியாய் உள்ளது என்பதால் அதற்கு தோற்றமும் இல்லை, அழிவும் இல்லை. அப்படியாயின் முத்தியில் ஆணவம் அழிவது எங்கனம்?**

இறைவனைப் போலவும் உயிரைப் போலவும் ஆணவமும் அனாதியாய் உள்ள ஒன்றுதான். அதற்கு தோற்றமும் இல்லை அழிவும் இல்லை. உயிர் முத்தி அடைந்த பொழுது அதற்கு கட்டாக அமைந்த ஆணவத்தின் பிடி முற்றாக நீங்குகிறது. இதனால் உயிரின் ஆற்றல்கள் ஆணவத்தால் மறைக்கப்பட்ட நிலை அகன்று விடுகிறது. ஒளிக்கு முன் இருள் விலகுவது போல் சிவனின் திருவருள் ஆகிய ஒளிக்குமுன் உயிருக்கு இருளாக அமைந்த ஆணவத்தின் பிடி விலகுகிறது ஆணவம் அழிவதில்லை.

**பிற சமயங்கள் ஆணவம் பற்றி பேசுகின்றனவா? இல்லையெனில், உயிரின் குறைகளை அவை எவ்வாறு விளக்குகின்றன?**

ஆணவம் என்று ஒன்று இருப்பதாக சைவ சமயம் ஒன்று தான் கூறுகிறது. பிற சமயங்கள் கூறுவதில்லை. இந்திய சமயங்கள் பல உயிரின் அறியாமை, தற்செருக்கு போன்றவை மாயை, கன்மம் ஆகியவற்றால் உண்டாகின்றன என விளக்குகின்றன. மாயையும் கன்மமும் உயிரின் செயலுக்கு துணை புரிந்து, அதன் மூலம் அனுபவம் பெறச் செய்து, அதன் மூலம் அறிவு பெறச் செய்கின்றன. ஆகவே இவற்றின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல.

அந்நிய மதங்கள் சில எமது குறைகளுக்கு எமது மூதாதையர் எப்பவோ செய்த பாவமே (original sin ) காரணம் என்கின்றன. யாரோ எப்பவோ செய்த பாவச் செயலின் காரணமாக இன்றுள்ளவரும் இனி வருபவரும் துன்பம் அனுபவிக்க நேரிடும் என்பது அறிவியலுக்கு ஏற்றதல்ல. இதனை சைவம் ஏற்பதில்லை.

**கன்மம் அல்லது வினை**

**கன்மம் என்பது என்ன?**

கன்மம் என்பது கர்மா என்றால் செயல் என்று பொருள். தமிழில் 'வினை' என்று இது கூறப்படும். எமது செயல் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய பலன் உண்டு. தத்துவத்துறையில் கன்மம் அல்லது வினை என்பது செயலை குறிக்கும் செயலுக்குரிய பலனையும் குறிக்கும். சைவ சித்தாந்தத்தின் படி ஆணவம் போல் கன்மமும் அனாதியானது.

**வினைக் கொள்கை என்பது என்ன?**

ஒவ்வொரு செயலுக்கும் அதற்குரிய பலனுண்டு. அந்த பலனை செய்தவனே அனுபவிக்க வேண்டும். வினைக் கொள்கையின் சுருக்கமான விளக்கம் இது. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், பனை விதைத்தவன் பனை அறுப்பான்', போன்ற பழமொழிகள் வினை அல்லது கன்மக் கொள்கையை விளக்குவன.

எமது இன்ப துன்ப அனுபவங்கள் நாம் முன் செய்த நல்ல, தீய செயல்களின் பலனாக வருபவை. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற சங்கநூற்றொடர் பண்டைத் தமிழ் மக்களின் அனுபவ உண்மையாக வந்து வினைக் கொள்கையை விளக்குகிறது.

**கன்ம பலன் உயிரின் அனுபவத்திற்கு வருவது எப்படி?**

எமது எண்ணம், சொல், செயல் மூலம் நாம் வினை செய்கிறோம். இவ்வாறு செய்யப்படும் வினை ஆகாமியம் எனப்படும். செய்கின்ற செயல் முடிந்தாலும் செயலின் பலன் முடிவுக்கு வருவதில்லை. நற்செயலில் (நல்வினையின்) பலன் புண்ணியமாகவும் தீச்செயலின் (தீவினையின்) பலன் பாவமாகவும் மாறி உயிருடன் சேர்ந்து பிறவிகள் தோறும் செல்கின்றன.

பல பிறவிகளில் செய்த வினைகள், வினை களின் பலன்கள் பெரும் தொகையாக உயிரைத் தொடர்கின்றன. இவ்வினை தொகுதி சஞ்சிதம் எனப்படும். இதில் ஒரு பகுதி உயிர் எடுக்கும் ஒரு பிறவியில் அனுபவத்திற்கு வருகிறது. இங்ஙனம் உயிரின் அனுபவத்திற்கு வரும் வினை பிராரப்தம் எனப்படும். தமிழ் நூல்களில் இது 'ஊழ்' என்று கூறப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு பிறவியில் அனுபவத்திற்கு வராமல் மிகுதியாக இருக்கும் வினைத்தொகை அடுத்து வரும் பிறவிகளில் அனுபவத்துக்கு வரும்.

வினை அனுபவத்திற்கு வருவதற்கு இன்னொரு வினை செய்ய வேண்டியுள்ளது. வினை செய்வ தற்கு தேவையான உடல், உடற்கருவிகள், உலகப் பொருட்கள் ஆகியவற்றை மாயை என்னும் நுண்பொருளிலிருந்து இறைவன் படைத்தளிக் கிறான். அனுபவத்துக்கு வரவேண்டிய வினைப்பலனையும், அதற்கு ஏற்ற இடம், காலம் முதலியவற்றையும் இறைவனே தீர்மானிக்கிறான்.

**வினைப் பயன் உயிரின் அனுபவத்திற்கு வருவதற்கு இறையருள் தேவையா? தேவை எனின், இறைவனை நம்பாத சமயங்கள் தரும் விளக்கம் என்ன?**

கடவுள் நம்பிக்கையற்ற சமணம், போன்ற மதங்களும் கன்மத்தை நம்புகின்றன. வினை தானாக சென்று செய்தவனை சேர்ந்து அனுபவத் துக்கு வரும் அதை சேர்ப்பதற்கு ஒரு கடவுள் தேவை இல்லை என்று அவை கூறுகின்றன. இதனை விளக்க அவர்கள் காட்டும் பொதுவான உதாரணம் ஒன்று உண்டு. ஒரு பசு கன்று பல பசுக்களின் கூட்டத்தில் தானாகச் சென்று தன் தாய் பசுவை இனம் கண்டு பாலருந்தும். இது போலவே வினையும் பல உயிர்களிடையே தானாகவே சென்று அதனைச் செய்த உயிரைச் சேர்ந்து பலனுக்கு வரும் என்பது இச்சமயங்கள் தரும் விளக்கம்.

வினை, பசுக்கன்றை போல் அன்றி அறிவற்ற ஒரு சடப் பொருள். அதனால் அது தானாக சென்று செய்தவனை சேர மாட்டாது. அதனை சேர்க்க முற்றறிவும் பேராற்றலும் கொண்ட இறைவன் ஒருவன் வேண்டும். இது சைவ சமயம் தரும் விளக்கம்.

**ஒரு பிறவியில் ஒருவன் செய்த கன்மம் முழுவதும் அடுத்த பிறவியில் அனுபவத்திற்கு வருமா? அல்லது வேறொரு பிறவியில் அனுபவத்துக்கு வருமா? அனுபவத்துக்கு வரும் காலம்?**

ஒரு பிறவியில் செய்த கன்மம் முழுவதும் அந்தப் பிறவியிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு பிறவியிலோ அனுபவத்துக்கு வருவதில்லை. ஒரு நேரத்தில் ஓரிடத்தில் விதைத்த தானியங்கள் முழுவதும் ஒரே நேரத்தில் முளைவிடுவதில்லை. சில முந்தியும் சில பிந்தியும் முளை விடுகின்றன. இது போன்றே கன்மம் அனுபவத்துக்கு வரும் முறையும் அமைந்துள்ளது. விதையும் தன்மை விதைத்த நிலத்தின் தன்மை முதலியன விதை முளைவிடும் காலத்தை நிர்ணயிக்கின்றன. இது போன்றே செய்த வினையின் மென்மை வன்மை ஆகிய தன்மை, வினை செய்ய வேண்டிய உடல், உடற்கருவிகளின் தன்மை, ஆகியவற்றுக்கு ஏற்ப வினை அனுபவத்துக்கு வரும் காலம் நிர்ணயிக் கப்படுகிறது. உரிய காலமும் இடமும் 'காலம்', 'நியதி' ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் இறைவனாலேயே நிர்ணயிக்கப்படுகிறன.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**சிவன்கோயில் கட்டுவதால் தீமைகள் வருமா ?**

மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமாம் இலிங்கமாதி நளின புட்கரிணியாதி
சேதமுற்றிடின் முன்போலச் செய்கின்றோர்க்கு உறும்பலந்தான்
ஓதமுன் செய்தோர் தம்மில் ஆயிரங் குணிதம் ஓங்கும்!

- சிவபுண்ணியத் தெளிவு

பெரிய தவத்தோர் இருக்கின்ற மடங்கள் முதலியனவும், சிவலிங்கம் விளங்கும் திருக்கோயில் முதலியனவும், தாமரை விளங்கும் திருக்குளங்கள் முதலியனவும் பழுதடைந்தால், அவற்றினை முன்போல் திருத்திக் கட்டுகின்றவர்கள் அவற்றினை ஆரம்பத்தில் கட்டியெழுப்பியவர்களினைக் காட்டிலும் பெரும்பலனை அடைவர் என்பது இப்பாடல் உணர்த்தும் செய்தியாகும். இதிலிருந்து இருபெரும் உண்மைகள் நாம் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். சிவாலயங்களினை எழுப்புதல் பெரும்புண்ணியம் என்பதும், அவை சிதிலமடைந்தால் அவற்றினைத் திருத்தி முன்போல் எழுப்புகின்றவர்கள் அக்கோயிலினை கட்டியவர் களினைக்காட்டிலும் பெரும்பலன் பெறுகின்றார்களென்பதுமாம். எனவே, சிவாலயம் எழுப்புதலும் சிவாலயங்கள் சேதமுற்றால் அவற்றினை முன்போல் தாபிப்பதும் புண்ணியமேயொழிய, ஒருபோதும் தீமை வரா!

சுமார்த்தமதம் முதலிய பல்வேறு வடநாட்டு சம்பிரதாயங்களில் அழித்தல் கடவுளாகிய உருத்திரனும் சிவபெருமானும் ஒன்றென்ற கொள்கை உண்டென்பதினால், அம்மதத்தார் எல்லோரும் சிவாலயங்களினை அழித்தற்கடவுளின் ஆலயம் என்று கருதினர். ஆனால், சைவசமயத்தவர் வழிபடும் சிவபெருமான், பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் ஐவருக்கும் மேற்பட்ட, ஐவரினையும் அதிட்டித்து அருளும் கருணைக்கடலாகிய பரம் பொருளாவார். பொன்னார் மேனியனாக விளங்கும் சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்காகத் தாய்ப்பன்றியாக வந்த பெருங்கருணை வடிவினர். சுந்தரமூர்த்தி நாயனாருக்காகக் காதல் தூது சென்றுவந்த எளிவந்த பிரான். "நன்றுடையானைத் தீயதிலானை" என்பார் திருஞானசம்பந்தப்பெருமான். நன்மையே அருளுபவன் என்று கூறியருளிய திருஞானசம்பந்தப்பெருமான், இந்திய சமயங்களில் உள்ள சுமார்த்தமதத்தார் முதலியோர் தமிழரினைக் குழப்புவர் என்பதினை உணர்ந்துதானோ என்னவோ, ஒருபோதும் தீமையினைச் செய்யாதவர் என்பதினையும் வலிந்து வலியுறுத்தும் நிலைக்குள்ளாயினர்.

தரைதனை இலக்கு அதுஆக எறிந்தகல் தவறாது அற்றே
அரனையும் குறித்துச் செய்த வினை பழுது ஆகாது அற்றே
பரமனும் செய்தார் செய்திப் பலத்தினைக் கொடுப்பன் பாங்கால்
குருலகு என்னும் பேதம் வினைதொறும் குறித்துக் கொண்டே!

- சிவதருமோத்திரம்

தரையினை இலக்குவைத்து வானில் எறியும் கல் எங்ஙனம் தவறாது வீழ்ந்து தரையினை அடைவது உறுதியோ, அதுபோன்று சிவபெருமானைக் குறித்துச் செய்த பணியும் தவறாது நல்ல பலனையே அளிக்கும் சிவபெருமான் ஒருவர் செய்த பணியைச் சீர்தூக்கி, அதன் தன்மைக்கு ஏற்பப் பயனை நல்குவான் என்று சிவதருமோத்திரம் என்னும் உபாகம நூல் அருளிச்செய்கின்றது.

நோயாளிகள் நன்மையடையவேண்டும் என்று ஒருவர் தம் சத்தியெல்லாம் விரயஞ்செய்து தம்பணத்தினையும் கொடையாளரிடம் இரந்துபெற்ற பணத்தினையெல்லாம் கொண்டு மருத்துவமனை கட்டுகின்றார். இப்போது அவரால் அந்த மருத்துவமனையினை கால சூழ்நிலைகளால் நன்றாகப் பேணமுடியவில்லை என்பதுடன், நோயாளிகளின்பால் அன்பு கொண்டு பொதுமக்களும் அந்த மருத்துவ மனையினைப் பேண முன்வரவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள்! நோயாளிகளின்பால் அன்புகொண்டு மருத்துவமனை கட்டியது தீமையினைத் தருமா? அல்லது அந்த மருத்துவமனை நன்றே இயங்க வேண்டும் என்ற சிந்தையில்லாத பொதுமக்கள் தீமையுடையவர்களா? எங்ஙனம் ஒரு மருத்துவமனை உடற் பிணியினை நீக்குமோ, அதுபோல் உயிர்களினை வருத்தும் வினையினை ஒழிப்பது சிவவழிபாடாகும்! அந்தச் சிவவழிபாட்டின் பொருட்டு சிவாலயம் எழுப்புதல் சிவப்பணி! எனவே, சிவாலயம் எழுப்புகின்றவர் சிவப்பணிக்குரிய பெரும்பலனினைப் பெறுதல் உறுதி! அந்தச் சிவாலயம் சீரும் சிறப்புடன் விளங்க சைவப்பொதுமக்கள் உதவாவிடின், அதனால் ஒருபோதும் எந்தத் தீமையினையும் கட்டியவர்பெற்றுக்கொள்ளமாட்டார்!!!

**சிவபெருமானினை வழிபட என்ன தகுதி வேண்டும்?**

அன்பே என் அன்பே என்று அன்பால் அழுது அரற்றி
அன்பே அன்பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்! - திருக்களிற்றுப்படியார்

சிவபெருமானை நோக்கி அன்பே என்றும் என் அன்பே என்றும் அன்பினால் அழுது அரற்றி, அச்சிவபெருமானின் அன்பே தனக்கு அன்பாகக் கொண்டு, "நான்" என்னும் ஆணவத்தினை விடுத்து வழிபடுவதே உண்மை வழிபாடாகும். அங்ஙனம் இல்லாது தீர்த்தம், தியானம், சிவார்ச்சனைகளால் உண்மைப்பலன் வரா! என்பதே மெய்கண்ட சாத்திர நூல்களில் ஒன்றான திருக்களிற்றுப்படியார் உரைத்தருளுகின்றது. இந்நூல் சிவாகம ஞானபாத நூல் என்னும் சிறப்புடையது. இதிலிருந்து, சைவசமயத்தவர்களாகிய நாம் அனைவரும் தெளிந்து கொள்ளவேண்டியது ஒன்றேயொன்றுதான்! சிவபெருமானினை வழிபட சிவபெருமான்பால் கொள்ளும் அன்புதான் அடிப்படைத் தகுதியாகும்.



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானால்
இரங்குவான் பணி அறங்கள்

- சிவஞானசித்தியார்

ஒழுக்கம் முதலிய பொது அறங்களினைக் கைக்கொள்ளும்போது சிவபெருமான்பால் அன்புகொள்ளும் நல்லூழ் வலுப்பெறும் என்பது அருணந்தி சிவாசாரியப்பெருமான் அருளிச்செய்துள்ள சிவஞானசித்தியார் என்னும் சிவாகமஞானபாத நூல் விளக்குகின்றது.

**ஒருவர் இன்னொருவருக்காக வழிபடலாமா ? அதில் பயன் உண்டா?**

உண்டு!

பூம்பாவை உயிர்பெற்று வரவேண்டும் என்று திருஞான சம்பந்தப்பெருமான் சிவபெருமானிடம் வேண்டினார். அப்பூதியடிகளின் மகன் உயிர்பெற்றெழ வேண்டும் என்று திருநாவுக்கரசு பெருமான் சிவபெருமானிடம் வேண்டினார். திலகவதியார் தமது தம்பியார் சமணமதத்தில் இருந்து சைவம் தழுவவேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டினார். சிவபாதவிருதயர் சமணம் முதலியன வலுத்து சைவம் தாழ்ந்து சிவனடியார்கள் நொந்து நிற்பதுகண்டு வருந்தி, சிவபெருமானிடம் வேண்டினார். தவத்திரு ஞானப்பிரகாசர் பெருமான், நாவலர்பெருமான் முதலியோர் சைவமக்கள் நலம்பெற வேண்டும் என்று சிவபெருமானிடம் விண்ணப்பித்து வழிபட்டுப் பணியாற்றினர்.

வேண்டுபவர் சிவபெருமானிடம் கொண்டிருக்கும் பத்தியின் மேன்மையிலும் யாருக்காக வேண்டுகின்றாரோ, அவருக்கு உள்ள ஊழ்வினைகளின் அளவிலும் பயன் அமையும். வேண்டுபவரின் சிவபத்தித் திறத்தினையோ, யாருக்காக வேண்டுகின்றாரோ அவரின் ஊழ்வினைத் திறத்தினையோ, அவர்பொருட்டு நிகழும் பயனினையோ, அளக்கும் கருவி எதுவும் மானிட அறிவுக்கு இல்லை. அது சிவபெருமான் ஒருவருக்கே உரித்தானது! நாம் ஓரளவு உய்த்துணரலாம்!

"ஒரு வினைக்கோர் வினையால் வீடு வைதிகசைவம் பகரும் மரபில் ஆற்றப் பற்றியது கழியும் இது வினையால் ஏற்கும் பான்மையுமாம்" என்பது சிவாகம ஞானபாத நூலாகிய சிவப்பிரகாசத்தில் கூறப்பட்ட செய்தியாகும். சைவநூல்களில் கூறியுள்ளதுபடி உரியவர்களினைக் கொண்டுவித்துச் செய்யும் கழுவாய்களும் வினைகளினை ஒழிக்க துணை நிற்கும் என்பது முடிவு. இங்கு உரியவர்கள் என்பது சிவபத்தியுடையவர்கள் என்பதினை உய்த்துணரலாம். சிவபெருமான்பால் பத்தியில்லாத வேடதாரிகளினைக் கொண்டு செய்யும் எந்தக்கிரியையும் பலனினைத் தரா! சிவபெருமான்பால் பத்தியுடையவர்களே இன்னொரு உயிரில் சிவப்பொலிவினை உண்டாக்கி வினை ஒழிக்கும் ஆற்றலுடையவர்களாவர். பெற்றான்சாம்பனுக்கும் முட்செடிக்கும் உமாபதி சிவாசாரியப்பெருமான் முத்தி கொடுத்தார் என்பதினால் இவ்வுண்மை பெறப்படும். இதனாலேயே பிற உயிர்கள் பொருட்டுச் செய்யும் பரார்த்தபூசையினை கோவில்களில் நிகழ்த்தும் சிவாசாரியர், உரியமுறையில் சமய,விசேட,நிர்வாண,ஆச்சாரிய அபிடேகம் பெற்று ஆத்மார்த்த சிவபூசையினை இல்லத்தில் நித்தஞ் செய்து வருபவராக இருத்தல் வேண்டும் என்று சிவாகமங்கள் வலியுறுத்துகின்றன.

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தழி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியை
பேறிட்டென் உள்ளம் பிரியகி லாதே - **திருமந்திரம்**

ஒருவருடைய வினையினை இன்னொருவர் சுமக்கமுடியாது என்பது திருமந்திர முடிவு. ஒருவருக்காக இன்னொருவர் வழிபடலாமேயொழிய, ஒருவருக்காக இன்னொருவர் வினையினைச் சுமக்க முடியாது. ஒருவர் செய்த பாவத்திற்கு இன்னொருவர் கழுவாய் தேடுவதில் பயனில்லை. ஆனால் உரியவர் தமது தவறினை உணர்ந்து சிவபத்தியுடையவர்களினை அடைந்து யுத்திக்கும் அனுபவத்திற்கும் சிவாகம நூல்களுக்கும் பொருத்தும் உரிய கழுவாய்களினை அவர்களினைக் கொண்டுவித்துச் செய்தால், பயன் பெறமுடியும் என்பது உறுதி! சிவபத்தி உடையவர்கள் என்பதினால் சிவஞானிகள், சிவாசாரியர் முதலாயினோர் அடங்குவர்.

திருமால்,பிரமன்,இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் தமது வினைகளினைப் போக்கிக்கொள்வதற்கு கழுவாயாகச் சிவவழி பாட்டினையே கைக்கொண்டனர் என்பது புராணங்கள் முழுதும் விரவியுள்ள அருட்செய்திகளாகும். சிவவழிபாட்டினை மிஞ்சிய கழுவாய் வேறில்லை என்பது இதனால் நன்கு தெளியலாம்.

# அனுராதபுரத்தில் கிடைத்த பழமையான கண்ணகி சிலை

இலங்கையில் கண்ணகி வழிபாட்டுக்கு நீண்ட தொடர்ச்சித்தன்மை உண்டு. கயவாகு மன்னன் கொணர்ந்தது, கயவாகுவுக்கும் முந்தைய தாய்த்தெய்வ வழிபாடொன்றின் உருமாற்றம், என்றெல்லாம் பல ஆய்வுலகக் கருதுகோள்கள், வாய்மொழி, இலக்கியச் சான்றுகள் இருந்தாலும், கண்ணகி பற்றி தமிழிலும் சிங்களத்திலும் கிடைத்துள்ள தொல்லியல் கல்வெட்டுச் சான்றுகள் மிகக் குறைவே.





அப்படி கண்ணகி பற்றிக் கிடைத்த தொல்லியல் சான்றுகளில் முக்கியமானவை இந்த இரு இறைபடிமங்கள். இவை அனுராதபுரத்தில் கிடைத்தவை. அங்குள்ள யேதவனராம விகாரத்தின் அருங்காட்சியகத்தில் தற்போது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களத்தாரின் அடையாளப்படுத்தலின் படி இவை இரண்டும் சைவ இறைமூர்த்தமான மாதொருபாகன் (அர்த்தநாரீசுவரர்) வடிவங்கள். ஆனால், இவை இரண்டின் உடலமைப்பும் ஆண் பாதி பெண் பாதி என்று இனங்காண முடியாதவாறு பெண்ணுடலின் அங்க இலக்கணங்களுடனேயே வடிக்கப்பட்டுள்ளன.

இரு கைகளும் தொங்கும் நிலையிலுள்ள திருவுருவம், இவை இரண்டிலும் காலத்தால் முற்பட்டது. அதன் இருசெவிகளிலுமுள்ள காதணிகள் இரண்டும் வேறுபட்டவை என்பதால் இச்சிலையை மாதொருபாகன் வடிவம் என்று இனங்கண்டிருக்கக் கூடும். இலங்கையின் சிங்கள மற்றும் பௌத்தக் கலைப்பாணி இவ்வுருவத்தில் தென்படுகின்றது. இச்சிலையை ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பார் பேராசிரியர் சி.பத்மநாதன்.

மற்றச்சிலை அதன் கலை வேலைப்பாடுகளின் அடிப்படையில் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அடையாளப்படுத்தப்படுகிறது. பாதி மூடிய கண்களுடன் இடது கை அஞ்சல் காட்ட வலது கையில் ஒரு உடைந்த பொருளுடன் நிற்கிறாள் இத்தேவி. வலது கையிலுள்ள பொருளை உடைந்த சிலம்பு என்று இனங்காண்கிறார் பேராசிரியர். வேறு சிலர் அது உடைந்துபோன மலர் மொட்டு என்பர். ஆனால், அதிலுள்ள தவாளிப்புகளைக் கொண்டு அது நிச்சயமாக மலர் மொட்டு அல்ல் ஒரு ஆபரணம் ஒன்றே, எனவே சிலம்பு என்பதே பொருத்தம் என்பார் பேராசிரியர்.

இவ்விரு சிற்பங்களும் கண்ணகியுடையவை என்று சொல்வதற்கு மிக உறுதியான சான்று, இவ்விரு சிலைகளினதும் மார்பகங்களின் அமைப்பு. முதல் சிலையில் வலது மார்பகம் திரங்கிச் சிறுத்து உருக்குலைந்து காணப்படுகிறது. இரண்டாம் சிலையில் வலது மார்பகம் வெட்டி மூளியாக்கப்பட்ட தோற்றத்தில் வடிக்கப்பட்டிருக்கிறது. எனவே இத்தெய்வம் கண்ணகி தான். ஏனென்றால் அவள் தன் மார்பைத் திருகி எறிந்து மதுரையை எரித்தவள். கேரளத்தில் “ஒற்றைமுலைச்சி அம்மன்” என்ற பெயரில் அவளுக்குக் கோவில்கள் அமைந்திருந்தன.

சரி. இந்தச் சிலைகள் பத்தினித் தெய்வத்தினுடையவை தான். ஒத்துக்கொள்ளலாம். ஆனால். விடயம் தெரிந்தவர்களை சற்று குழப்பத்துக்குள்ளாக்கும் ஓரம்சம் இச்சிலைகளில் உள்ளது. சிலப்பதிகாரத்தின் படி, கண்ணகி வழக்காடி தன் கணவன் குற்றமற்றவன் என்று நிரூபித்ததும் பாண்டியன் தன் தவறுணர்ந்து உயிர் துறக்கிறான். அப்போது,

**“யான் அமர் காதலன் தன்னைத் தவறிழைத்த**
**கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான் என்று**
**இடமுலை கையால் திருகி மதுரை”**

கண்ணகி இழந்தது தன் இடமார்பை என்று சிலப்பதிகாரமும், சிங்கள் நூல்களும் சொல்ல, இந்தச் சிலைகளில் ஏன் வலது மார்பு சிதைந்தவாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறது? தென்னக மரபில், சிற்பங்களும் திருவுருவங்களும் மரபு மீறி அமைக்கப்படுவது வழமை தான் என்பதைச் சுட்டிக்காட்டி அமைதி காண்பார் பேராசிரியர் பத்மநாதன். சிவாகமங்களும் சிற்பவிதி நூல்களும் வரையறுக்கப்பட்ட பின்னர் தான் இறைதிருவுருவங்களை வார்ப்பதில் விதிமுறைகள் இறுக்கமாகப் பேணப்படலாயின. உதாரணமாக, மாதொருபாகன் வடிவத்தில் கூட, ஆண் வலப்பாதி, பெண் இடப்பாதி என்று காட்டப்படுவது தான் மரபு. ஆனால், ஆண் இடப்புறமும் பெண் வலப்புறமும் காட்டப்பட்டுள்ள மாதொருபாகன் சிற்பங்களும் உண்டு. மரபை மீறி இடது காலுக்குப் பதில் வலதுகாலைத் தூக்கி ஆடும் நடராசர் சிற்பங்களும் உண்டு. அவ்வாறே இந்தப் பத்தினிப் படிமங்களை வார்த்த சிற்பியும் தன் கற்பனை வளத்தைப் பாவித்து வலமார்பு இழந்தவளாகக் கண்ணகியைச் சித்தரித்திருக்கலாம் என்று முடிக்க முடியும்.

விந்தையாக இச்சிற்பங்களுடன் இன்னொரு பண்பாட்டு முடிச்சை போட்டுப்பார்க்க முடிகிறது. சிலம்புக்கும் சிங்கள நம்பிக்கைக்கும் மாறாக, கண்ணகியை வலமார்பு அரிந்த தோற்றத்தில் பாடிப் பரவுகின்றன கிழக்கிலங்கைக் கண்ணகி இலக்கியங்கள். அங்கு கண்ணகிக்காக நிகழும் குளிர்த்திச்சடங்கில்

“மாறான பாண்டியன் மாளவென்று வலமான கொங்கை அரிந்தாள் வந்தாள்” என்று பாடுகிறது அம்மன் குளிர்த்திக்காவியம். அதே காவியம் வேறோரிடத்தில் “வாளையெடுத்து வலமுலையைத் தான் அரிந்து தோளாடையாகத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்.” என்றும் கண்ணகியைப் போற்றுகிறது.

சிலப்பதிகாரம் சித்தரிப்பது போல், கண்ணகி தன் மார்பைத் தானே திருகிப் பிய்த்து எறியவில்லை. வாளால் அறுத்தெறிந்தாள் என்கிறது இக்காவியம். தன் உறுப்பை வாளால் வெட்டுவது கையால் அகற்றுவதை விட இயல்வது தான். முலைவரிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக வரி வசூலிப்பாளரிடம் தன் மார்பகங்களை வாழையிலையில் வெட்டிக் கொடுத்ததாகச் சொல்லப்படும் கேரளத்து நங்கேலியின் கதையை இங்கு ஒப்பிடலாம்.

மீண்டும் அனுராதபுரச் சிற்பங்களுக்கு வருவோம். அதில் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாவது சிலை, முதலாவது சிலை போலன்றி, வெட்டி அகற்றப்பட்ட வலது மார்பகத்தின் தெளிவான அடையாளத்துடனேயே செதுக்கப்பட்டிருக்கிறது. அது குளிர்த்திக் காவியம் கூறும் “வாளையெடுத்து வலமுலையைத் தானரிந்த” கதையை அறிந்திருந்த சிற்பியால்தான் வடிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது அந்தச் சிலையை வடித்த சிற்பி அறிந்திருந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியிலேயே குளிர்த்திக் காவியம் பாடப்பட்டிருக்கவேண்டும்.

அந்த மரபின் தொன்மையான சான்றுகளில் ஒன்று இன்று அருங்காட்சியகக் காட்சிப்பொருளாக முடங்கிக் கிடக்கிறது. ஆனால் அதே பண்பாட்டுத்தொடர்ச்சியில் தோன்றிய இலக்கியங்கள் மன்றாட, எண்ணூறு ஆண்டுகள் கடந்தும் இங்கே வலமார்பைத் துணித்துத் துணித்துக் குளிர்ந்து கொண்டிருக்கிறாள் கண்ணகி. தன் தாய்மையைத் திருகி எரிந்தபடி, தன் மடியில் பிறந்த கோடி கோடி உயிர்களை ஊழிகள் தோறும் எரித்தபடி இந்த இயற்கை எத்தனை ஆயிரம் ஆண்டுகளாய் குளிர்ந்து கனிந்து நிற்கின்றது? அதனால் தானே கூர்ப்பென்ற ஒன்று சாத்தியமாகிறது?

அன்னையால் அடிக்கப்படாத குழந்தை இருக்கிறதா இந்த உலகில்?மீதிக் குட்டிகளுக்குப் பாலூட்டுவதற்காகவே தான் ஈன்ற குட்டியொன்றை அன்னை நாய் உண்கிறது. அன்னையும் அழல் பொங்கும் வலமார்பையே மதுரைக்கு ஈந்தாள்.

தானே முலையரிந்து நின்றுகொண்டிருக்கிறாள். அவள் அரிந்தமுலை விரைவில் குளிரட்டும். மறுமுலையில் பிறக்கட்டும் புதியதோர் உலகுக்கான அறம்.

தாயே குளிர்ந்தருள்வாய்! படம்: இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான “சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்” நூலின் (2003) அட்டைப்படம்.

துலாஞ்சனன் விவேகானந்தராஜா
இலங்கை சைவநெறிக் கழகம்

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவும், ஐம்பூதநாதர் திருக்கோயில் சங்குநீராட்டும்

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.**

பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் 'தென்னாடு செந்தமிழாகம சிவமடம்' அமைகிறது. அங்கே ஐம்பூதநாதர் அருட் கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந் நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடு டைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழாகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற்கேற்றால் போல் செந்தமிழாகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை



வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலை மாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசை கள், சிவமங்கல நீராட்டுகள், குடமுழுக்குகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு, மூன்று ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித்திங்கள் பதினெட்டாம் நாள் (01-06-2023) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு மிகவும் சிறப்பாக இறையருளோடு நடந்தேறியுள்ளது.

**2022ம் ஆண்டிற்க்கான தென்னாட்டு நிகழ்வுகள்**
**(24வது திங்கள் இதழின் தொடர்ச்சி)**

### புரட்டாசித் திங்கள் - 2022

(08-09-2022) - ஆவணித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

(18-09-2022) - யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த துறையினர் தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் மாலை பூசை வழிபாட்டில் கலந்து கொண்டதோடு அதனைத்



தொடர்ந்து நடைபெற்ற இரவு விருந்திலும் கலந்து கொண்டனர்.

(23-09-2022) - புரட்டாசித் திங்கள் கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

(25-09-2022) - புரட்டாசித் திங்கள் 8ம் நாளாகிய, பேரொடுக்க மறைமதியில் (மகாலய அமாவாசை) 'தென்புலத்தார் வழிபாடு' முக்கியத்துவப்படுத்தப்பட்டு, பேரொடுக்க மறைமதி சிறப்புப் பூசைகள், செந்தமிழ் வேள்விகள் என்பன இடம்பெற்றன. இதில் பலரும் கலந்து கொண்டு எள்ளுநீர் இறைத்து வழிபாடு ஆற்றினார்.

(26-09-2022) - புரட்டாசித் திங்கள் 9ம் நாள் ஒன்பானிரவு (நவராத்திரி) விரதமானது ஆரம்பமாகி, ஒன்பது நாட்கள் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று, பத்தாம் பிறைநாளில் (06.10.2020), ஏடு தொடக்குதலும் இடம்பெற்று நிறைவடைந்தது. நிறைவு நாளில் அடியார் பெருமக்களுக்கு மனோன்மணி அம்மையின் ஒன்பனிரவு திருக்கோல படம் வழங்கப்பட்டது.

### ஐப்பசித் திங்கள் - 2022

(08-10-2022) - புரட்டாசித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

(08-10-2022) - யாழ் பிரதான வைத்தியசாலை அருகே உள்ள புதுமனை ஒன்றிற்கு, புதுமனைப் புகுவிழா சடங்கானது செந்தமிழில் தென்னாடு சிவமடத்தினால் ஆற்றி வைக்கப்பட்டது.

08-10-2022) - கடையிற் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்பட்டது.

(10-10-2022) -புரட்டாசித் திங்கள் நிறைமதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

(22-10-2022) - ஐப்பசித் தேய்பிறை கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

### கார்த்திகைத் திங்கள் - 2022

(04-11-2023) - யாழ் இந்துக் கல்லூரி ஞான லிங்கேச்சரர் 4ம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் ஆற்றப்பட்டது.

(05-11-2022) - ஐப்பசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

(07-11-2022) - ஐப்பசித்திங்கள் நிறைமதியை முன்னிட்டு, ஐம்பூதநாதருக்கு அன்னத்திரு முழுக்கும், சிறப்பு பூசை வழிபாடுகளும் இடம்பெற்றது, அதனைத் தொடர்ந்து 26வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலந்து கொண்டமை சிறப்பா கும். அந்நாளில் திருமூலர் குருபூசை வழி பாடுகளும் இடம்பெற்றது.

(08-11-2022) - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தாயுமானவர் சுவாமி திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டல் வைபவம் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. இதில் மாகாணக்கல்வி அமைச்சு செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(20-11-2022) - நீத்தார். கந்தையா பத்மநேசன் அவர்களின் இறுதிச் சடங்கு வழிபாடுகள் செந்தமிழாகம முறையில் தென்னாடு செந் தமிழாகம சிவமடத்தினால் நிகழ்த்தப்பட்டது.

(21-11-2022) - கார்த்திகைத் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடு இடம்பெற்றது.

### மார்கழித் திங்கள் - 2022

(07-12-2022) - கார்த்திகைத் திங்கள் நிறை மதி நன்னாளில் தீபத்திருநாள் வழிபாடும், நிறைமதி வழிபாடுகளும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து, 27வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம்பெற்றது.

**21,22,23,25-12-2022 - மார்கழிப் பெருவிழா**

கொழும்பு, திருகோணமலை, சம்பூர், வவுனியா, யாழ்ப்பாணம் என ஐந்து இடங்களில் மார்கழிப் பெருவிழா

கடந்த வருடம் நடைபெற்ற மார்கழிப் பெருவிழாவின் திருவருட் பயனாக, ஈழத்திருநாட்டின் பல பகுதிகளில் மார்கழிப் பெருவிழாவை நடத்துவதற்கு சைவ அன்பர்கள் முன்வந்தனர். அதனடிப்படையில் வடக்கு, கிழக்கு, மேற்கு என சைவத்தமிழ் அடியார்கள் பரவி வாழும் பிரதேசங்களை முன்னிலைப் படுத்தி யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை, சம்பூர் என ஐந்து இடங்களில் அடுத்தடுத்த நாட்களாக மார்கழிப் பெருவிழா இடம்பெற்றது.

மேலும் இப்பெருந்திருவிழாப் பயணத்தில், தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர கிளைமட தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டு அருளாசிகளை வழங்கியிருந்தார். அவர்களோடு தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, குன்றத்தூர் தருமையாதீனப் புலவர், "திருமுறைக்களஞ்சி யம்", சிவத்திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி அவர்களும், குமாரவயலூர் "திருமுறைக்கலா நிதி", முனைவர். சிவத்திரு. திருஞான பாலச் சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களும் இத்திருவருள் பயணத்தில் இணைந்து சிறப்புரைகள், திருமுறை விண்ணப்பங்களை வழங்கி அடியார் பெருமக்களை திருவருள் வெள்ளத்தில் திளைக்கச் செய்திருந்தனர்.

யாழில் மார்கழிப் பெருவிழாவானது இரண் டாவது முறையாக, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில், "தில்லைக்கூத்தன் திருவம்பலம்", "திருவாதவூரடிகள் திருவம்பலம்" என இரு அரங்கங்களாக இடம்பெற்றது.

(22-12-2022) -திருக்கோணமலை சைவத் தமிழ் பாடசாலைகளில், தென்னாட்டின் ஏற் பாட்டில், தருமை ஆதீன தம்பிரான் தவத்திரு. மீனாட்சி சுந்தரம் சுவாமிகள் தலைமையில் மாணவர்களுக்கான சைவம் தொடர்பான தெளிவுபடுத்தல் அருளுரைகள் இடம்பெற்றது. (உவர்மலை விவேகானந்தா கல்லூரி, சண்முகா மகளிர் இந்துக் கல்லூரி, செல்வநாயகபுரம் இந்துக் கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி)

(26-12-2022) - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலானது கற்றளிக்கோயிலாக உருப்பெற வேண்டி, திருவெறும்பூர் ஓதுவார் சிவத்திரு. முருகானந்தம் ஐயா அவர்களினால் ஒரு மண்டல (48 நாட்கள்) திருமுறை விண்ணப்பம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(27-12-2022) -திருவெம்பாவை பெருவிரதம் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் அதிகாலையில் திருமஞ்சனம் இடம்பெற்று, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடி சிறப்பு பூசைகள் இடம்பெற்றது.

(தொடரும்....)

**"அனைவரும் வருக அப்பனின் அருள் பெறுக"**

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு - தென்னாடு நிலவன்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்


**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

### மக்களும் மன்னர்களும் நாவுக்கரசர் திருநெறியை போற்றியமை

கல்லில் கட்டி கடலில் இடப்பட்ட நாவுக்கரசர் பெருமான், வருணன் உதவியோடு திருப்பாதிரிப்புலியூரை அடைந்த போது, திருப்பாதிரிப்புலியூர் அடியவர் கூட்டம் எல்லாம் கூடி, மகிழ்ச்சியால் பேரொலி செய்து அப்பர் பெருமானை எதிர்கொண்டனர். நாவுக்கரசரும் அடியவர் கூட்டத்தோடு சென்று, திருப்பாதிரிப் புலியூர் இறைவனை வணங்கி, திருவருள் நெறி உலகில் விளங்குமாறு பாடுவாராய், "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்" எனத் தொடங்கி குளிர்ந்த தமிழால் ஆன மாலைகளைக் கொண்டு எம்பெருமானுக்கு சாத்தினார்.


மேலும், இவை போன்ற செழுமையான தமிழ்ப் பதிகங்களைப் பாடி, அப்பதியில் தங்கிப் பின், வீரட்டானத்து இறைவர் வீற்றிருந்தருளும் திருவதிகைப் பதியினைச் சென்று அடைந்தார். கொடிய சமணர்கள் செய்வித்த தீய துன்பங்கள் எல்லாம் அழிய, வெற்றி பெற்று மேலேறி வந்த இனிய தமிழரசர் இங்ஙனம் எழுந்தருள இருப்பதை அறிந்த, திருவதிகை அடியவர்கள் ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர். திருத்தொண்டர் பெருமானும், வீரட்டானத்து இறைவரை அடைந்து, "எம்பெருமானை ஏழையேன் பண்டு இகழ்ந்தவாறே" என்ற கருத்துடன் தம் பரிவினால் திருத் தாண்டகத் தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடிப் பெருவாழ்வு அடைந்தனர்.

இவ்வாறு திருவதிகையில் செந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றையும் பாடித் திருப்பணிசெய்துவரும் அந்நாள்களில், சமணர்களுக்காகப் பெரும் தீங்குகளையே இடைவிடாது செய்துவருபவனா



கிய மகேந்திர வர்மனாகிய பல்லவ மன்னனும், திருவதிகையை அடைந்து, ஆளுடைய அரசரை வணங்கி, சிவபெருமானின் திருவடிகளைச் சாரும் நெறியாகிய சைவப் பெருநெறியைச் சேர்ந்தான். சமணர்களின் மொழிகள் பொய்யென்று கண்டு, உண்மையுணர்ந்த பல்லவ மன்னனும் பாடலிபுத்திரத்திலிருந்த சமணர் பள்ளிகளையும் பாழிகளையும் ஒருங்கே இடித்துக் கொண்டு வந்து, திருவதிகை நகரில் சிவபெருமானுக்குக் "குணபர ஈச்சரம்" என்னும் கோயிலை கட்டுவித்தான்.

### திருநாவுக்கரசர் தேவ இலச்சினை பெறலும், திருத்தல வழிபாடும்



அந்நாட்களிலே திருநாவுக் கரசநாயனார் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று இறை வழிபாடு செய்து திருப்பதிகம் பாட விரும்பி, அவ்விடத்தினின் றும் நீங்கி, திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளை வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டு, பெண்ணாகடத்திற்சென்று திருத்தூங்கானை மாடமென்னும் திருக்கோயிலினுள் சென்று, சுவாமியை வணங்கி, "சுவாமி! அடியேன் இழிவினையுடைய சமணசமயத் தொடக்குண்டு வருந்திய இத்தேகத்துடனே உயிர் வாழ்தற்குத் தரியேன். அடியேன் தரிக்கும் பொருட்டுத் தேவருடைய இலச்சினையாகிய சூலத்தையும் இடபத்தையும் அடியேன்மேற் பொறித்தருள வேண்டும்" என்னுங் கருத்தால்,

**பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்**
**என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல**
**மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்**
**துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.**

என்னும் திருப்பதிகம் பாடினார், உடனே பரமசிவனுடைய திருவருளினால் ஒரு சிவபூதம் மற்றொருவருக்குந் தெரியாதபடி அவ்வாகீசருடைய திருத் தோளிலே சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறித்தது.

நாயனார் தம்முடைய திருத்தோளிலே பொறிக்கப்பட்ட இலச்சினைகளைக் கண்டு மன மகிழ்ந்து, திருவருளை நினைந்து கண்ணீர் சொரிய விழுந்து வணங்கி எழுந்தார். அவர் அத் தலத்தில் இருக்கின்ற நாளிலே, திருவரத் துறைக்கும் திருமுதுகுன்றுக்கும் சென்று இறைவழிபாடு செய்து, திருப்பதிகம் பாடி, கிழக்கே நிவாக் கரையின் வழியாக நடந்து, சிதம்பரத்திலே சென்று, கனகசபையிலே ஆனந்த தாண்டவம் செய்தருளுகின்ற சபாநாயகரை இறையன்போடு வீழ்ந்து வணங்கி, இரண்டு கைகளும் சிரசின் மேலேறிக்குவிய, இரண்டு கண்ணினின்றும் ஆனந்த கண்ணீர் மல்க, அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனம் கசிந்துருக, "என்று வந்தாய்" என்னுந் திருக்குறிப்போடு நிருத்தம் செய்கின்ற சுவாமியுடைய திருநயனத்தினின்றும் பொழிகின்ற திருவருளாலாகிய ஆனந்தமேலீட்டினாலே "கருநட்ட கண்டனை" என்னுந் திருவிருத்தமும், "பத்தனாய்ப் பாட மாட்டேன்" என்னுந் திருநேரிசையும் பாடினார்.

தேர் ஓடும் அழகிய வீதிகளினுள்ளும், பொருந்திய திருப்பணிகள் செய்து, கும்பிடும் தொழிலை உடையவராகிப் பாடும் தூய திருவாக்காகிய பணிகளும் செய்து கொண்டு சிலநாள் அங்கே எழுந்தருளியிருந்தார். கூத்தப் பெருமானின் அருளைப் பெற்றதால் உண்டான பெருமகிழ்ச்சி மேன்மேலும் பெருக,

**அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.**

எனும் திருக்குறுந்தொகை பாடியருளினார். திருநாவுக்கரசர் இவ்வாறு தமக்குப் பொருத்தமான பணிகளைச் செய்து வந்த நாள்களில், திருவேட்களம் செல்ல எண்ணி, அவ்விடத்தை அடைந்து, வழிபாடு செய்து திருப்பதிகம் பாடி, திருக்கழிப்பாலையையும் அடைந்து வழிபாடு செய்து, திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, சிலநாள் அங்கே இருந்தார்.

பின் அவ்விடத்தினின்றும் நீங்கி, வழியிலே, நினைப்பவர் தம் மனத்தையே கோயிலாகக் கொண்ட கூத்தப் பெருமானைச் சிறுபொழுதும் மறந்தால் நான் உய்வனோ எனும் கருத்தைப் புலப்படுத்தி "பனைக்கை மும்மத வேழமுரித்த வன்" என்று எடுத்து "அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப் பொழுதும்மறந் துய்வனோ" என்னுந் திருக்குறுந் தொகை பாடிக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்தார். சிதம்பரத்தில் பொன்னம்பலத்தில் பொருந்திக் கூத்தாடுகின்ற இறைவரை "அரியானை யந்தணர் தஞ்சிந்தை யானை" என்னும் பெரிய திருத்தாண்டகம் பாடிப் போற்றி வணங்கி, "செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்கும்" என்னும் திருநேரிசை பாடியருளினார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (131 - 176)**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு புவனநாயகி உடனுறை அடைக்கலங்காத்த நாதர் (திருமாகறலீசுவரர்) திருக்கோயில் - திருமாகறல்

## ( தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 239 ஆவது திருக்கோயில் - திருமாகறல் )

"மன்னுமறை யோர்களொடு பல்படிம மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை யோரிலெழு மாகறலுளான்."

வேதாகமக் கலைகளைக் கற்பவர்களின் ஒலியும், பெண்களின் பாடல், ஆடல் ஒலிகளும் சேர்ந்து இனிமை தர, மலையின் நிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசும் வளம் மிகுந்த எங்கள் திருமாகறலுளான் உறையும் அருள்மிகு திருப் பதியே புவனநாயகி உடனுறை அடைக் கலங்காத்த நாதர் திருக்கோயில் ஆகும். இத்திருத்தலம் சோழர் பெருமக்களால் கட்டப்பட்டது. மக்கட்பேறு வேண்டுவோர் இங்கு வந்து உடலால், திருக்கோயிலை வலம் வந்து வழிபாடு செய்யும் வழக்கம் தொன்று தொட்டு நிலவி வருகின்றது.

**அமைவிடம்:** செங்கல்பட்டு (காஞ்சிபுரம்) மாவட்டம், தமிழ்நாடு

**காஞ்சிபுரம் - உத்திரமேரூர் (வழி) ஒரிக்கை பேருந்து பாதையில் உள்ள தலம். காஞ்சிபுரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.**

**இறைவர் திருப்பெயர்:** திருமாகறலீசுவரர், உடும்பீசர், புற்றிடங்கொண்டார், அடைக்கலம் காத்த நாதர், மகம் வாழ்வித்தவர், பாரத்தழும்பர், நிலையிட்ட நாதர், மங்கலங்காத்தவர், அகத்தீசுவரர், பரிந்து காத்தவர், தடுத்தாட் கொண்டவர்.
**இறைவியார் திருப்பெயர்:** புவனநாயகி, திரிபுவன நாயகி.
**கோயில் மரம்:** எலுமிச்சை
**தீர்த்தம்:** அக்கினி தீர்த்தம்(குளம்), சேயாறு.
**வழிபட்டோர்:** சம்பந்தர், பட்டினத்து பிள்ளையார், சேக்கிழார், இந்திரன், நான்முகன் முதலியோர்
**பாமாலை:** சம்பந்தர், பட்டினத்து பிள்ளையார், சேக்கிழார்.

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.
(3-72)

ஆறைவட மாகற லம்பரையா றணியார்பெரு வேளூர் விளமர்தெங்கூர்
சேறைதுலை புகலூ ரகலா திவைகாதலித் தானவன் சேர்பதியே
(2-39 இல் 5)

(இப்பதிகத்தில் மிகுதி சிதைந்து போய் விட்டன.)

**சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தது**

அங்கண் அமரர் பெருமானைப்
பணிந்து போந்தா டரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார்
மகிழும் பதிகள் பலபோற்றி
மங்கை பாகர் அமர்ந்தருளும்
வயல்மா கறலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணில்முட்
டத்தைச் சென்று குறுகினார்.
(12-28 இல் 984)

**திருத்தலச் சிறப்பு**

திருமாகறல் திருத்தலமானது, இந்தியாவின் தமிழகத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்யாற்றின் கரையில் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வினை தீர்க்கும் "விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை யாடலரவம்" எனும் திருப்பதிகம்



பாடிய தலமாகும். சிவபிரான் இராசேந்திர சோழனுக்கு பொன் உடும்பாகத் தோன்றி, அவன் துரத்த புற்றில் ஓடி ஒளிந்து பின் சிவ லிங்க வடிவமாக வழிபட்ட தலம் என்பது தொன்நம் பிக்கை. மாகறம் என்பது உடும்பு எனப்பொருள்படும்.

இத்தலத்தில் சிவபெருமான் தான் தோன்றி மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். மூலவரின் விமானம் யானையின் பின் பகுதி அமைப்பில் அமைந்துள்ளது. திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கும் தெய்வானைக்கும் திருமணம் நடந்தது. இந்திரன் முருகனுக்கு திருமணப்பரி சாக வெள்ளை யானையை கொடுத்தான். புதுமணத்தம்பதிகளை வெள்ளையானையில் அமரச்செய்து அக்காட்சியை கண்ணாற கண்டு மகிழ்ந்தான். திருமாலும் இக்காட்சியை காண விரும்ப, முருகன் இத்தலத்தில் வெள்ளையானை மீது அமர்ந்து காட்சி தந்தார் என்பன இத்தலம் பற்றிய தொன்மைக் கதைகளாகும்.

திருத்தல வரலாறு

நான்முகன் இத்தலத்தில் வழிபட்டு வந்த காலத்தில், ஆண்டு முழுவதும் காய்க்கும் அதிசயப்பலாமரம் ஒன்றை நட்டார். அப்பலாமரம் நாள்தோறும் கனி கொடுத்து வந்தது. இராசேந்திர சோழ மன்னன் இந்த அதிசய பலாமரத்தைக் கண்டு வியந்து, அந்த ஊரிலிருந்து தினமும் ஒருவர் தலைச்சுமையாக இந்த பழத்தை எடுத்து சிதம்பரம் நடராசர் கோயிலில் சேர்க்க வேண்டுமென உத்தரவிட்டான். நடராசருக்கு இப்பழத்தை மதிய வேளையில் அமுது செய்து அதை மன்னருக்கு கொடுப்பது வழக்கம்.

ஒருமுறை அந்தண சிறுவனின் முறை வந்தது. 'இந்த மரத்தில் இருந்து தினமும் பழம் பறித்துப் போக மக்களை ஏவும் மன்னன், வேலைக்காரர் களை இதற்கென நியமித்திருக்கலாமே' என எண்ணிய அவன் ஒரு தந்திரம் செய்தான். அந்த ஊர் மக்களிடம், "நான் சிறுவன். பழத்தை சுமக்க சிரமப்படுவேன். நீங்கள் எல்லோரும் போய் இந்த பழத்தை கொடுத்து வாருங்கள். நான் இங்கிருந்து உங்கள் வீடுகளை பார்த்து கொள்கிறேன்," என்று கூற, அனைவரும் சிதம்பரம் சென்று விட்டனர். இந்த மரம் இருந்தால் தானே பிரச்சனை வரும். இதை அழித்து விட்டால், நம் ஊர் மக்கள் தினமும் பழம் சுமக்கும் தொல்லை இருக்காதே எனக் கருதியவன், அந்த மரத்தை எரித்து விட்டான். ஊர் திரும்பிய மக்களிடம் பலாமரத் தில் தானாக தீப்பிடித்து சாம்பலாகி விட்டதாக தெரிவித்தான். ஊராரும் நம்பிவிட்டனர்.

மறுநாள் பலாப்பழம் சிதம்பரம் செல்ல வில்லை. அந்த சிறுவனை அழைத்து மன்னர் விசாரித்தார். அப்போது அவன்,"பலாப்பழத்தை சிதம்பரம் கொண்டு வருவதற்கு தாங்கள் எங்களுக்கு எந்த வசதியும் செய்து தரவில்லை. எனவே தான் மரத்தை எரித்தேன்" என்றான். அதற்கு மன்னன், "தகுந்த வசதி வேண்டும் என நீ இதை என்னிடம் தெரிவித்திருக்க வேண்டும். இதை நீ செய்யாததால் உனது கண்களை கட்டி நாடு கடத்த உத்தரவிடுகிறேன்." என்றான். காவலர்கள் சிறுவனை அழைத்துச் சென்ற போது, மன்னனும் உடன் சென்றான்.

ஊர் எல்லையில் அவனை விட்டு விட்டு திரும்பிய போது, ஒரிடத்தில் பொன்னிற உடும்பு தென்பட்டது. அதை பிடிக்க காவலாளிகள் சென்ற போது அது ஓர் புற்றினுள் சென்று மறைந்தது. காவலாளிகள் அந்த புற்றை ஆயுதங்களால் கலைத்த போது உடும்பின் வாலிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது. அப்போது அசரீரி தோன்றி, சிறுவன் என்றும் பாராமல் நாடு கடத்தியதற்காக கண்டனக்குரல் எழுந்தது. மன்னன் மயங்கி விழுந்தான். மயக்கம் தெளிந்த மன்னனிடம் மீண்டும் அசரீரி தோன்றி, சிவபெருமானே உடும்பாக வந்ததாகவும், அவ்விடத்தில் ஓர் சிவன் கோயில் கட்டி வழிபாடு செய்யும்படியும் ஆணையிடப்பட்டது. அதன் வாயிலாகவே இத்திருக்கோயில் உருப்பெற்றது. இன்றும் அதே உடும்பின் அளவிலான இலிங்கமே கருவறையில் வைத்து வழிபடப்படுகின்றது.

**திருக்கோயில் அமைப்பு**

திருமாகறல் திருத்தலமானது இன்றும் மிகப் பொலிவோடு விளங்குகிறது. ஐந்து நிலை இராசகோபுரத்தோடு, யானையின் பின் பகுதி போன்ற விமானம் எனும் அமைப்போடு கட்டப் பட்டுள்ளது. கோயில் திருவீதியில் தெற்கு பக்கமாக ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்தி) அருள்பொங்கும் முகத்தோடு காட்சி தருகிறார்.

மலைமகளும், நான்முகனும் அடுத்தடுத்த திருமுன்களாக மிளிர்கிறார்கள். ஆறுமுகப் பெருமான் இந்திரனின் வெள்ளை யானையில் அமர்ந்து அன்பர்களுக்கெல்லாம் அருள்பாலிக் கும் சிலை இத்தலத்து அற்புதம். மூலவராக அடைக்கலம் காத்த நாதர் திருமாகறலீசுவரராக காட்சி தருகின்றார். ஆவுடையாரின் மீது உடும்பின் வால் பகுதியே இலிங்கமாய் உள்ளது. ஒரு மாபெரும் சம்பவத்தின் எதிரொலி இன்னும் அங்கு மின் துடிப்பாய், அதிர்வலையாய் அந்த சந்நதியில் பரவிக் கிடக்கிறது. அருகே வரு வோரை ஆட்கொள்கிறது.

அந்த உடும்பைப் பார்க்கும் போதெல்லாம் நம் உடல் சிலிர்க்கிறது. ஈசன் எப்படி வேண்டுமானாலும் வருவான் என நினைக்க வைக்கிறது. உடும்பின் மேல் இன்னும் அந்த தழும்பு மாறாது இருக்கிறது. ஆயுதத்தால் ஏற்பட்ட தழும்பால், எம்பிரான் 'பாரத்தழும்பர்' எனும் பெயர் பெற்றார். உடும்பு வடிவில் வந்ததால், உடும்பீசர் ஆனார். உடும்பு புற்றில் சென்று மறைந்ததால், புற்றிடங்கொண்டநாதர் என புகழ் பெற்றார். பாரதழும்பரான ஈசன் பத்தர்களின் தழும்பை மறையச் செய்பவாராக அருள்பாலிக்கின்றார்.

எனவே, இத்தலத்து இறைவன் எலும்பு சம்பந்தமான அத்தனை பாதிப்புகளையும் தன் அருட்பார்வையால் போக்குகிறார். மருத்துவம் முடியாது என விட்டுவிட்டதை மாகறலீசர் கைகொடுத்து தூக்கி நிறுத்தும் அற்புதம் இங்கு நிகழ்கின்றது. ஈசனுக்கு அருகேயே அம்மை திரிபுவனநாயகி, அருட்பார்வையோடு திகழ்கி றாள். அம்மனுக்கு அருகே ஒன்பான்கோள்கள் (நவகிரகம்), பைரவர் திருவுருவமும் காணப் படுகின்றன.

சிவபிரான் காதலித்து உறையும் பதிகள் பழையாறை, திருமாகறல் முதலான தலங்களா கும். அவற்றைச் சென்று தொழுவீர்களாக. எனவே திருமாகறல் செல்லுங்கள். திருப்பம் காணுங்கள்.

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோயில்







தென்னிந்தியத் தமிழரைப் போல் ஈழத்தமிழருக்கும் 2000 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான வரலாறு உண்டு என்பதற்கு, ஈழத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கிடைத்திருக்கும் தொல்பொருட் சான்றுகள் ஆதாரமாக விளங்குகின்றன. அத்தகைய தொல்பொருட் சின்னங்களில் பெரும்பாலானவை தமிழ்ப்பிராமி மொழிக் கல்வெட்டுக்களும், நாகவணக்கத்தினைக் காட்டும் சிற்பங்களும், நாகர் வாழ்ந்த குடியிருப்பு உதிரிப்பாகங்களும், வழிபாட்டுச் சின்னங்கள் மற்றும் பொருட்களும் அடங்குகின்றன. இவையெல்லாம் இலங்கையில் பழமைக் குடிகளாக வாழ்ந்த நாகர் என்னும் இனத்தவரை அடையாளம் காண்பிக்கின்றது. அவ்வாறான நாக இனத்தவரால் போற்றப்பட்டு வந்த ஈழத்துச் சிவன் கோயிலாக கிளிநொச்சியில் உருத்திரபுரம் என்னும் ஊரில் அமைத்துள்ள உருத்திரபுர சிவன் கோயில் விளங்குகின்றது.

இச் சிவன் கோயில் கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் என்ற ஊரில் அமைந்துள்ளது. ஊரின் பெயர் சிவனுடைய திருநாமங்களில் ஒன்றையே கொண்டு, உருத்திரபுரிச்சரராக எழுந்தருளியுள்ளார். குளம், பலவகையான மரங்கள் சூழ்ந்த காடு, வயல் என இயற்கை அம்சங்கள் நிறைந்த சூழலில் மூர்த்தி தலத்தீர்த்தச் சிறப்புக்களுடனும், பண்டைய வரலாற்று பெருமைகளுடனும் புகழ் பெற்று விளங்கும் சிவன் கோயிலாகத் திகழ்கின்றது.

### உருத்திரபுரமும் நாகர்களின் இருப்பும்

கிழக்கிலங்கையில் அண்மைக் காலத்திற்கு முந்தியதாக, நாகர்களின் இருப்பு தொடர்பான ஆய்வுகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து வட இலங்கையில் பல பிராந்தியங்களில் நாகர்களின் இருப்பு தொடர்பான பல கண்டுபிடிப்புக்கள் தற்போது கள ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது. இந்த அடிப்படையில் வட இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள உருத்திரபுரம், நாகர்கள் வாழ்ந்த பூமியாக பதிவு செய்யப்படுகின்றது. காரணம் இங்கு நாகர்களின் இருப்பு தொடர்பான அதிகமான தொல் பொருட் சின்னங்கள் காணப்படுகின்றமையைக் கூறலாம்.

இலங்கையில் பண்டைய காலத்தில் நாகர்களே உற்பத்தி முறை, நாகரிகம், தமிழ்மொழி, நாகவணக்கம், சைவசமய வணக்கம், வழிபாட்டு முறைகள் என்பவற்றை அறிமுகம் செய்தார்கள். நாகர்கள் வழிபாடுகளுக்கும், பொதுப்பாவனைகளுக்கும் உருவாக்கிய பொருட்களில் "மணிநாகன்" என்ற பெயரைப் பொறிப்பது வழமையாக கொண்டிருந்தனர். அவர்களின் வழிபாட்டு இடங்களை "மணிநாகன் பள்ளி" என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் எழுத்து மொழியாக தமிழ்பிராமியை பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக சிவலிங்கம், நந்தி, மயூரம் முதலானவற்றிலும் புத்தர்பாதம், புத்தர்சிற்பம் போன்றவற்றிலும், வழிபாட்டுக்குப் பயன்படுத்திய விளக்கு, தூபக்கால், உரல், அம்மியும் குழவியும் போன்ற பொருட்களில் தமிழ்ப்பிராமி எழுத்தில் "மணிநாகன்" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். இதேபோல் நாகர்கள் வழிபாட்டிற்கென்று உருவாக்கப்பட்ட நாகர் கோட்டம், சைவக் கோயில், பௌத்தபள்ளி, சேதியம், போன்ற நிலையல்களிலும், தமிழ்ப் பிராமி வரி வடிவத்தில் "மணிணாகன் பள்ளி" என்று குறிப்பிட்டுள்ளனர்.

இத்தகைய பொறிப்புக்கள் தாங்கிய தொல்பொருட் சின்னங்கள், வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் பரவலாகச் செறிந்து காணப்படுவதனைக் கொண்டு, இலங்கையில் பழமைக் குடிகளாக தமிழ் மொழி பேசும் நாகர்கள், வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் ஐந்து தலை நாகத்தை வணங்கியுள்ளார்கள். நாக வணக்கத்தில் பற்றுள்ளவர்களாக விளங்கியுள்ளனர். பின்னாளில் தமிழ்ச் சைவர்களாகவும், தமிழ்ப் பௌத்தர்களாகவும் தங்களை மாற்றியுள்ளனர் என்பது வரலாறாகின்றது.

இந்த அடிப்படையில் உருத்திரபுரம் என்னும் ஊரும் இவ்வாறே நோக்கப்பட வேண்டியுள்ளது. அண்மைக் காலங்களில் வரலாற்றைச் சரியாக புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடும் பௌத்த இனவாதிகள் தமிழர்களின் பண்டைய சைவ சமய இருப்பிடங்களான வெடுக்கு நாறிமலை, குருந்தூர்மலை வரிசையில் உருத்திரபுரத்தையும் தம் வசப்படுத்த முற்படுகின்றனர்.

நீர்ப்பாசன முறை பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட ஹென்றி பார்க்கர் (Henry Parker) என்பவர், உருத்திபுர சிவன் கோயில் வளாகத்தில் மேற்கொண்டு கூறியிருந்த குறிப்புக்கள் இத்தருணத்தில் மிக முக்கியமாகப் பார்க்கப்படுகின்றது.

அவருடைய கருத்துப்படி தமிழ்பேசும் நாகர்கள் இங்கு வாழ்ந்தமைக்கான தடயங்கள் மிகையாக காணப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார். அவரின் கூற்றுப்படி, உருத்திரபுரச் சிவன் கோயிலிலும், அதனை அண்மித்த வளாகத்திலும் நாகர்களோடு தொடர்புடைய பல தொல்பொருட் சின்னங்கள் தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பழைய சிவன் கோயில் இருந்தமைக்கான கற்தூண்கள் கோயில் வளாகத்தில் காணப்படுகின்றது. அவற்றில் "மணிநாகன் பள்ளி" என தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது. 2400 ஆண்டுகளுக்கு முன்பு பழமையானது என்று போற்றப்படும் சதுர வடிவமான ஆவுடையாரில் சிவலிங்கம் அமைந்துள்ளது. அவ் ஆவுடையார் பகுதியில் "மணிநாகன்" என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கோயிலில் பயன்பாட்டில் உள்ள சந்தணம் அரைக்கும் கல்லிலும் இப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. நாகரின் குல மரபுச் சின்னமான நாகபாம்பு வடிவங்களும் (நாகபந்தம்), இங்குள்ள கற்தூண்களில் சிலவற்றில் காணப்படுகின்றது. திருக்கோயில் வளாகத்திற்கு முன்னால் ஒரு செங்கல் கட்டுமானத்திலான மண் மேடு காடுகளால் வளர்ந்து மூடப்பட்டுள்ளது. சில செங்கற்கட்டிகளில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக நாகர்களின் கல்லறைகளின் மேல் எழுதப்பட்டிருக்கும் "வேள் நாகன் மகன் வேள் கண்ணன், வேள் கண்ணன் மகன் வேள் நாகன்" என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. புத்த பெருமானையும் நாகர்கள் "மணிநாகன்" என்றே பெயரிட்டு அழைத்தனர், புத்த பெருமானுக்கு கட்டிய கோட்டத்திற்கு "மணிநாகன் பள்ளி" என்று தமிழ்ப் பிராமி எழுத்தில் பொறித்த தடயங்களும் இவ்வாறான தொல்பொருள் சின்னங்களின் பதிவுகளைக் கொண்டு தொகுத்து நோக்கின் இன்றைக்கு 3000 வருடங்களுக்கு முற்பட்ட நாகரின் பண்டைய இருப்பிடமாக உருத்திரபுரம் விளங்கியிருப்பது தெள்ளத் தெளிவாகின்றது. இவ்விடத்தில் தமிழ்ப் பேசும் நாகர்கள் வசித்துள்ளனர். அவர்கள் நாகவழிபாட்டிலும், சைவவழிபாட்டிலும் ஈடுபாடு உடையவர்கள், புத்த பிரானையும் போற்றியிருந்தனர். ஆக, தொன்மைக் காலத்தில் நாகர் சமயப்பண்பாட்டில் நாக வழிபாட்டையும், சைவத்தையும், தமிழ்ப்பௌத்தத்தையும் வேறுபடுத்திப் பார்க்காத சமயப் புரிந்துணர்வுடன் வாழ்ந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

### திருக்கோயில் வரலாறு

வரலாற்றுப் பழமை வாய்ந்த வட இலங்கையின் சிவன் கோயில்களுள் மூத்த கோயில் என்று எண்ணப்படுவதும், இலங்கையின் ஏழு ஈச்சரங்களுள் ஒன்றாக வைத்துச் சிறப்பிக்கப்படும் கோயிலாகவும் உருத்திரபுரீசுவரர் சிவன் கோயில் விளங்குகின்றது. ஆரம்ப காலங்களில் குடியிருப்பு அற்ற அடர்ந்த வனப்பகுதியாக இருந்த உருத்திரபுரத்தில், 1952 ஆம் ஆண்டு குடியேற்ற கிராமமாக உருவெடுத்ததைத் தொடர்ந்து, 1882 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரச அதிபராக கடமை புரிந்த சேர் வில்லியம் டுவைனன் (Sir william Twynan) என்பவர் இவ்வூரின் காட்டுப்பகுதியில் மறைந்திருந்து ஆவுடையாருடன் பொருந்திய சிவலிங்கத்தையும், அதன் அருகாமையில் உள்ள குளத்தையும் அடையாளப்படுத்தியதைத் தொடர்ந்து, அங்குள்ள குடியேற்ற வாசிகளால் சிவனுக்கு ஓர் திருக்கோயில் எழுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வமனோகரின் "ஈழத்து சைவச் செல்நெறியில் உருத்திரபுரம் சிவன்கோயில்" என்ற கட்டுரையில் "உருத்திரபு குளத்திற்கு வடக்கே உள்ள காட்டுப்பகுதியில் சிதைவடைந்திருந்த கட்டடங்களும் கருங்கற்களும், கருங்கற்தூண்களும் இருக்கக் கண்டு திருவாளர். கந்தி வேலாயுதம்பிள்ளை என்பவர் தவத்திரு. வடிவேற் சுவாமிக்கும் இவ் அற்புதத்தை தெரிவிக்க அவர் அக் காலத்தில் சமயத் தொண்டாற்றிய சன்மார்க்க சபையினருக்கு தெரியப் படுத்தி காட்டை துப்பரவு செய்தார். சிதம்பரத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்ததை ஒத்த கற்தூண்களும் கருங்கற்பாறைகளும் இத்திருக்கோயிலில் இருக்கக் கண்டு இங்கு ஓர் சிவன் கோயில் இருந்திருக்கலாம்" என்று குறிப்பிட்ட குறிப்பிலிருந்து, இப்பொழுது உள்ள சிவன் கோயிலுக்கு முன்பே 2400 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கொள்ளத்தக்க சிவன் கோயில் இருந்திருக்க வாய்ப்பிருந்ததாகக் குறிப்பிடலாம்.

ஆனால் பேராசிரியார் ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதிய "கிளிநொச்சி மாவட்டத்தின் பூர்வீர் மக்களும் பண்பாடும் தொல்லியல் வரலாற்று நோக்கு", "பூநகரி தொல் பொருளாய்வு" எனும் கட்டுரையில், இக்கோயில் கட்டட இடிபாடுகளின் எச்சங்கள் சோழர் காலத்திற்கு முந்தியதாக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா அவர்கள் "கிளிநொச்சியின் பண்பாட்டுத் தொன்மையும் மூலங்களும்" எனும் கட்டுரையில் தென்னிந்தியாவில் பல்லவர் கால பத்தி இயக்கத்தின் சூழலில் உருத்திரபுரம் சிவன் கோயில் எழுச்சியடைந்திருக்க வேண்டும் என்றும், பல்லவர் பத்தி நெறியின் பின்னணியில் பௌத்தத்திற்கு எதிராக எழுந்த கோயில் முகாமை நடவடிக்கைகளில் உருத்திரபுரம் சிவன் கோயிலும் பங்கு கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் (நன்றி. கி. க. கிரிகரன்). இவரின் கூற்றுப்படி பல்லவர் காலத்திற்கும் சற்று முற்பட்ட கோயிலாக இருக்க வாய்ப்பிருக்கின்றது.

### மூல மூர்த்தியின் சிறப்புக்கள்

திருமூலர் ஈழத்தைச் சிவபூமி என்று போற்றியமைக்கு ஒப்பாக சற்சதுர வடிவில் ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் ஒன்று உருத்திரபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஊரின் பெயரினைச் சூட்டி அச் சிவலிங்க மூர்த்தியை உருத்திரபுரீசுவரன் என்று அனைவராலும் போற்றி வணங்கப்பட்டு வருகின்றது. இச் சிவலிங்கம் இற்றைக்கு 2400 ஆண்டுகள் பழமையும் சிறப்பும் வாய்ந்தது என்று. பேராசிரியர். சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார். பொதுவாக இவ்வாறான அமைப்புடைய சிவலிங்கங்கள் ஏராளமாக பல்லவர் காலத்தில் கி.பி 6 ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்றதாகக் கருதுகின்றார். இத்தகு சிவலிங்கமும் அத்தகைய காலத்துக்குரியதாக இருக்கலாம் என்று கூறுகின்றார்.

இங்கு வாழ்ந்த முன்னோர்களின் வாய்மொழிக் கதையில் இச் சிவலிங்கம் ஆவுடையாரோடு பொறிக்கடவை கோயிலில் இருந்து எடுத்து வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தற்போது இத்திருக்கோயில் புதிப்பிக்கப்பட்டு வருகின்றது. உருத்திரபுரீசுவரருடன் அம்மையும் உடனுறைந்து அருள் சுரக்கின்றனர். விநாயகர், சனீசுவரர், வைரவர் ஆகியோருக்கும் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் மூன்று வேளை நித்திய பூசைகள் இடம் பெற்று வருவதோடு சிவனிரவு, ஆதிரை அருட்காட்சி வழிபாடு, திருவெம்பாவை ஓதுதல் ஆகிய விசேட தினப் பூசைகளும் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

அண்மைக் காலங்களில் இலங்கைச். சைவர்களின் செவிகளில், பத்திரிகைகள் மற்றும் தொலைக் காட்சி அலைவரிசைகள் வாயிலாக முணுமுணுக்கப்படும் சிவன்கோயிலாக உருத்திரபுரீசுவரர் திருக்கோயில் விளங்குகின்றது. பௌத்த இனவாதிகளின் அடக்குமுறைக்குள் அகப்பட எத்தணிக்கும் சூழ்நிலையில் இலங்கையில் தொண்மை மிக்க சிவனாக தம்மை அடையாளப்படுத்தி சைவ மக்களுக்கு ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் அவனருளாற்றலை நினைந்து, உருத்திரபுரீசுவரரின் தாள் வணங்கிப் போற்றுவோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



சிதம்பரம், மயிலாடுதுறை மற்றும் மலேசியா ஓதுவார்களால் தென்னாட்டில் திருமுறை விண்ணப்பம் (26-05-2023)



மங்களநாதர் திருக்கோயிலில் மாணவர்களுக்கு கண்டிகை (உருத்திராக்கம்) அணிவித்தல் (19-05-2023)





சித்திரைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (05-05-2023)






தென்னாடு திங்கள் இதழ் வழங்கல்



வைகாசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடு (17-05-2023)



சேக்கிழார் பெருமான் குருபூசை (25-05-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு விடை நல்லோரை வைகாசித் திங்கள் 20ம் நாள் நிறைமதி அன்று (03-06-2023 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org